விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 313 வள்ளுவர் ஆண்டு 2056 ஐப்பசி 11 செவ்வாய்க்கிழமை (28.10.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## உலகில் சிறந்த நகரங்களில் யாழ்ப்பாணமும் தெரிவு

05ஆம் பக்கம் பார்க்க

– யாழில் முறைகேடாக –

## சொத்துக் குவித்தவர்களுக்கு எதிராக விரைவில் நடவடிக்கை

07ஆம் பக்கம் பார்க்க

வெலிகம தவிசாளர் கொலைச் சந்தேகநபர் கைது

## 15 இலட்சம் ரூபாய் பணத்துக்கு டுபாயிலிருந்து கொலைக்கு ஏற்பாடு

(கொழும்பு)

வெலிகம பிரதேச சபையின் தவிசாளர் லசந்த விக்ரமசேகர கொலையுடன் தொடர்புடைய துப்பாக்கிதாரி என நம்பப்படும் ஒருவர் பொலிஸாரால் நேற்று முன்தினம்மாலை (26) மஹரகமப் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் மஹரகம, நாவின்ன பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை அவரிடம் முன்னெடுக்கப்பட்ட விசா

15ஆம் பக்கம் பார்க்க

வல்வெட்டித்துறையில்

## வீட்டில் தனிமையில் வசித்தவர் சடலமாக மீட்பு

(கரணவாய்)

வல்வெட்டித்துறை பகுதியில் தனிமையில் வசித்து வந்த ஒருவர் வீட்டில் உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இதில் அதேயிடத்தைச்

15ஆம் பக்கம் பார்க்க

நவம்பர் 21ஆம் திகதி

# அரசாங்கத்துக்கு எதிராக மாபெரும் எதிர்ப்புப் பேரணி

## கொழும்பில் ஒன்றுகூடிய எதிர்க்கட்சியினர்

(கொழும்பு)

அநுர அரசாங்கத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து நவம்பர் 21ஆம் திகதி மாபெரும் எதிர்ப்புப் பேரணி ஒன்றை நடத்த எதிர்க்கட்சிகளினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

(15ஆம் பக்கம் பார்க்க)

யாழ்.பல்கலைக்கழக

## ஊழியர் சங்கம் இன்று தொழிற்சங்கப் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கம் இன்று ஒருநாள் அடையாள தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளது.

தமக்கு வழங்கிய உறுதி

15ஆம் பக்கம் பார்க்க

## அநுர அரசாங்கத்தின் தேவைக்காக லசந்தவின் படுகொலை இடம்பெற்றதா?

### நாமல் ராஜபக்ஷ எம்.பி கேள்வி

(கொழும்பு)

துப்பாக்கிச் சூடு நிறுத்தப்பட்டதாக பொலிஸ் பிரதி அமைச்சர் சுனில் வட்டகல அறிவித்த நிலையில் வெலிகம பிரதேச சபைத் தலைவரின் துப்பாக்கிச் சூடு அரசாங்கத்தின் தேவைக்காகவே நடத்தப்பட்டதா? என்ற சந்தேகம் எழுந்துள்ளதாகப் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.



15ஆம் பக்கம் பார்க்க

## சூரன்போர்...



நல்லூர் கந்தசுவாமி கோவிலில் இடம்பெற்ற சூரன்போர் நிகழ்வு...

பருத்தித்துறையில்

## வைத்தியசாலைக்கு சிகிச்சை பெறச் சென்ற நபர் மரணம்

(கரணவாய்)

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு சிகிச்சை பெற முச்சக்கரவண்டியில் சென்ற நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதில் கட்டைவேலி கரவெட்டி கிழக்கைச் சேர்ந்த இரத்தினம் சிலம்புநாதன் (வயது-66) என்பவரே உயிரிழந்தவராவார்.

நேற்று திங்கட்கிழமை (27) காலை பருத்தித்துறை ஆதார

15ஆம் பக்கம் பார்க்க

## சுன்னாகத்தில் சடலம் மீட்பு

(கரணவாய்)

சுன்னாகம் ஆறுமுகம் வீதியில் உள்ள வீடு ஒன்றில் தனிமையில் வசித்த வயோதிப மாது ஒருவர் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இதில் அதே இடத்தைச் சேர்ந்த நடராஜா சந்திரா

15ஆம் பக்கம் பார்க்க

சீரற்ற காலநிலை

## 31 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் நாடு முழுவதும் பாதிப்பு

(கொழும்பு)

நாட்டில் தொடர்ச்சியாகப் பெய்த கனமழை காரணமாக ஏற்பட்ட அனர்த்தங்களில் 18 மாவட்டங்களைச் சேர்ந்த 31,623 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் 4 இடைத்தங்கல் முகாம்களில் 544 பேர் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

202 பேர் தமது உறவினர் வீடுகளில் தங்கவைக்கப்பட்டுள்ளதுடன் 5 வீடுகள் முழுமையாகவும் 847 வீடுகள் பகுதியளவிலும்

15ஆம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### யாழில் மீற்றர் வட்டிக்குப் பணம் வாங்கி

# பப்ஜி விளையாடிய இளைஞன் உயிர் மாய்க்க முயற்சி

யாழ்ப்பாணத்தில் மீற்றர் வட்டிக்குப் பணம் பெற்று பப்ஜி விளையாடிய இளைஞன் பெரும் நஷ்டம் அடைந்தமையால் உயிர் மாய்க்க முயற்சி செய்து யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது,

உரும்பிராய்ப் பகுதியைச் சேர்ந்த இளைஞன் ஒருவர் கடந்த சில வருடங்களாகப் பப்ஜி விளையாட்டுக்கு அடிமையாகியுள்ளார்.

அந்த விளையாட்டில் பணம் கட்டுவதற்காக மீற்றர் வட்டிக்குப் பணம் வாங்கி அதனைச் செலுத்தி விளையாடி வந்துள்ளார்.

அந்நிலையில் கடன் தொகை அதிகரித்த போது கடன் கொடுத்தவர்கள் இளைஞனின் வீட்டாருக்குப் பணம் கேட்டு நெருக்கடியைக் கொடுத்த வேளை வீட்டார் தமக்குச் சொந்தமான காணி ஒன்றினை விற்றுக் கடனை அடைத்துள்ளனர்.

இந்நிலையில் தற்போதும் இளைஞன் பப்ஜி விளையாட்டுக்காகப் பெருந்தொகைப் பணத்தினை மீற்றர் வட்டிக்கு வாங்கி செலவழித்துள்ள நிலையில் கடன் கொடுத்தவர்கள் வீட்டாருக்கு நெருக்கடி கொடுத்த போதிலும் வீட்டார் இம்முறை கடனை செலுத்த மறுத்ததால் இளைஞன் தனது உயிரை மாய்க்க முயன்றுள்ளார்.

உயிர்மாய்க்க முயன்ற இளைஞனை வீட்டார் மீட்டு யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதித்த நிலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் இளைஞன் சிகிச்சை பெற்று வருகின்றார். (ம-7,33)

### யாழ்.நகரில்

# இலக்கத் தகடற்ற காரில் ஹெரோயின் கடத்தியவர் கைது



(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரில் இலக்கத் தகடற்ற புதிய காரில் ஹெரோயின் போதைப்பொருளைக் கடத்திச் சென்ற நபரொருவர் நேற்று இரவு கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்.மாவட்டக் குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸாரால் குறித்த கைது முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது 11 கிராம் 600 மில்லி கிராம் ஹெரோயின் மீட்கப்பட்டு கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட கார் கைப்பற்றதுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் பிரபல வர்த்தகரின் மகன் எனவும் ஏற்கனவே ஹெரோயின் போதைப் பொருள் தொடர்பான வழக்கில் கைதாகிப் பிணையில் விடுவிக்கப்பட்டவரெனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த நபர் கைதிலிருந்து தப்புவதற்காக தமக்குக் கையூட்டு வழங்க முயற்சித்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைதான சந்தேக நபரை மேலதிக விசாரணைகளுக்கு பின்னர் யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ம-7,33)

### கிளிநொச்சியில்


# ஜேர்மன் தொழிற்பயிற்சி மாணவர்கள் போராட்டம்



கிளிநொச்சி ஜேர்மன் தொழிற்பயிற்சி நிலையத்தின் உப அதிபர் இடமாற்றம் செய்யப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஜேர்மன் தொழிற்பயிற்சி நிலைய மாணவர்கள் நேற்றுக் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

தற்போதைய அதிபர் ஓய்வு வயதையும் தாண்டிக் கடமையாற்றுகின்ற நிலையில் துடிப்புடன் செயற்பட்ட எமது உப அதிபர் இடமாற்றம் செய்யப்பட்டமையானது மாணவர்களின் நலன் பாதிக்கும் எனவும் இடமாற்றத்தை இரத்துச் செய்ய வலியுறுத்தி குறித்த போராட்டத்தில் ஈடுபட்டனர். (ம-7)

# மரண அறிவித்தல்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 11 - 12 - 1950 |  | 27 - 10 - 2025 |

## சிவகுரு செல்வராசா

### (உரிமையாளர் – விநாயகர் சேவிஸ் A9 கொக்குவெளிவீதி, வவுனியா)

யாழ்ப்பாணம் பெரியவிளானைப் பிறப்பிடமாகவும்வவுனியா குருமன்காடு இல.20, 2ஆம் ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட சிவகுரு செல்வராசா அவர்கள் நேற்று (27.10.2025) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவகுரு - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற உமாதேவி அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - நாகம்மா தம்பதியரின் அன்ப மருமகனும் சுமதி (வவுனியா), சசிதரன் (சுவிஸ்), சசிகுலம் (ஹொலண்ட்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுரேஸ்குமார் (பிரான்ஸ்), செல்வராணி, கஜிதா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் பிரதீபன் - ஜெயச்செல்வி, நவன், துஷன், ஆரியான், பிரசாந் ஆகியோரின் பாசமிகு பேரனும் தஸ்வந்தின் பாசமிகுப் பூட்டனும் காலஞ்சென்றவர்களான துரைராசா, நடராசா, நவரத்தினம், முத்துராசா, இராசரத்தினம், மற்றும் தம்பிராசா, தவமணி, சரஸ்வதி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, ஆனந்தராசா, அமிர்தலிங்கம், கந்தையா மற்றும் நாகம்மா, ஜெகதீஸ்வரி, இராசமணி, ஜெயமணி, நல்லதம்பி, இந்திராதேவி (கனடா), இந்திராணி, இராசநாயகி, கணேஸ்வரன், நளாயினி, முருகானந்தன் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.10.2025) புதன்கிழமை இல.20, 2ஆம் ஒழுங்கை, குருமன்காடு, வவுனியாவிலுள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 09.00 மணியளவில் தட்சநாதன்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல.20, 2 ஆம் ஒழுங்கை, குருமன்காடு, வவுனியா. (C-4202) தகவல் குடும்பத்தினர்

# 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 05.10.1942 மறைவு 09.11.2024

## அமரர் சின்னவி கந்தையா [சாரதி]

திதி : அட்டமி

ஆண்டொன்று சென்றதையா– உங்கள் ஆனந்த முகம்கண்டு,
சாந்தமான உங்கள் சொல்கேட்க ஆவலாய் நின்ற எம்மை,
ஏமாற்றி மறைந்ததேனோ? அனுதினமும் தங்கள் நினைவாக
நாம் அலைமோதி நிற்கின்றோம். உங்கள் நினைவுகள் என்றும் எம்முடனே,
உங்கள் ஆன்மா சாந்திபெற பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் 1ஆம் ஆண்டு நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் மதியபோசன நிகழ்வும் நாளை (29) புதன்கிழமை நண்பகல் 12.30 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

இவ்வழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

(1681) என்றும் நீங்கா நினைவுடன்:- குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீரற்ற காலநிலையினால்
## நீர் மூலம் பரவும் நோய்கள் அதிகரிப்பு
### சுகாதார நிபுணர்கள் எச்சரிக்கை



(கொழும்பு) ......................
**சீரற்ற காலநிலை காரணமாக , நீர் மூலம் பரவும் நோய்கள் அதிகரித்து வருவதாகச் சுகாதார நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.**

மழைநீர் நுளம்புகளின் இனப்பெருக்கம் செய்வதற்கு ஏற்ற சூழ்நிலையை உருவாக்குவதால், டெங்கு, லெப்டோஸ்பிரோசிஸ் , ஹெபடைடிஸ் ஏ ,டைபாய்டு மற்றும் பயிற்றுப்போக்கு போன்ற நோய்கள் வேகமாகப் பரவக் கூடும் என்று மூத்த ஆலோசகர் மருத்துவர் ஆனந்த விஜேவிக்ரம ஊடகம் ஒன்றிற்குத் தெரிவித்துள்ளார்.

வெள்ளம் சூழ்ந்த பகுதிகள் நுளம்புகளின் இனப்பெருக்கத்திற்கு ஏற்ற இடங்களாக மாறும் எனவும் வெள்ள நீர் விலங்குகளின் சிறுநீருடன் கலந்து, லெப்டோஸ்பிரோசிஸ் அல்லது எலிக் காய்ச்சல் பரவ வழிவகுக்கும் என்றும் மருத்துவர் ஆனந்த விஜேவிக்ரம தெரிவித்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

விவசாயிகள், கட்டுமானத் தொழிலாளர்கள் மற்றும் மீட்புப் பணியாளர்கள் வெள்ளம் அல்லது சேறு நிறைந்த பகுதிகளில் வேலை செய்பவர்கள் அல்லது நடந்து செல்பவர்கள் இது தொடர்பில் கவனம் செலுத்துமாறு அவர் எச்சரித்துள்ளார்.

அவர்கள் பாதணிகள், கையுறைகள் மற்றும் பாதுகாப்பு ஆடைகளை அணிய வேண்டும் எனவும் மேலும் காய்ச்சல், தலைவலி, சளி அல்லது தசை வலி போன்ற அறிகுறிகள் ஏற்பட்டால் உடனடியாக மருத்துவ உதவியை நாட வேண்டும், எனவும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

வெள்ளத்தின் போது மக்கள் பெரும்பாலும் கிணறுகள் அல்லது ஓடைகளிலிருந்து அசுத்தமான தண்ணீரைப் பயன்படுத்துகிறார்கள். இது இந்த தொற்றுநோய்களின் அபாயத்தை அதிகரிக்கிறது.

எனவே நுளம்பு உற்பத்தியைக் குறைக்கக் குப்பைகளை முறையாக அப்புறப் படுத்தவும், சாப்பாட்டுக்கு முன் கைகளைக் கழுவுதல், கொதிக்க வைத்த தண்ணீரைக் குடித்தல், உணவை மூடி வைத்தல், சேற்று அல்லது தேங்கி நிற்கும் தண்ணீரைத் தவிர்ப்பது போன்ற எளிய தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு மருத்துவர் ஆனந்த விஜேவிக்ரம தெரிவித்துள்ளார். (நி)

# 3500 மெட்ரிக் தொன்
## பொன்னி சம்பா இறக்குமதி

(கொழும்பு)
உள்ளூர் சந்தையில் ஏற்பட்டுள்ள கீரி சம்பா அரிசி பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக 3,500 மெட்ரிக் தொன் பொன்னி சம்பா அரிசி நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக இலங்கை சுங்கம் தெரிவித்துள்ளது.

அதன்படி அதன் முதல் தொகுதி கடந்த 23 ஆம் திகதி நாட்டிற்கு வந்ததாகக் கூறப்படுகிறது.

அத்துடன், இறக்குமதி செய்யப்பட்ட பொன்னி சம்பா அரிசியின் மற்றுமொரு தொகுதி கடந்த வெள்ளி மற்றும் சனிக்கிழமைகளில் நாட்டிற்கு கொண்டு வரப்பட்டதாக இலங்கை சுங்கம் தெரிவித்துள்ளது.

உள்ளூர் சந்தையில் ஏற்பட்டுள்ள கீரிசம்பா அரிசி பற்றாக்குறைக்கு தீர்வாக, GR 11 பொன்னி சம்பா அரிசியை கடந்த 15 ஆம் திகதி முதல் இறக்குமதி செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது.

அதன்படி, இறக்குமதியாளர்களுக்கு இறக்குமதி கட்டுப்பாட்டு உரிமங்களைப் பெறுவதற்கான தேவையிலிருந்து விலக்கு அளிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது.

உணவுக் கொள்கை மற்றும் பாதுகாப்புக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில், ஒரு இறக்குமதியாளருக்கு அதிகபட்சமாக 520 மெட்ரிக் தொன் அரிசியை இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்பட்டது. (நி)

# போதைப்பொருள் ஒழிப்பிற்கு
## கிராம மக்களின் ஒத்துழைப்பு அவசியம்
### வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்



(கொழும்பு)
போதைப்பொருட்களை ஒழிக்க பொலிஸாரின் நடவடிக்கை மட்டும் போதாது என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

போதைப்பொருள் விற்பனையையும் பாவனையையும் தடுக்க கிராம மட்டத்தில் சமூகங்கள் சுறு சுறுப்பாக இயங்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தி னார்.

வெளியுறவு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சில் சிவில் சமூகத் தலைவர்களுடன் நடந்த கலந்துரையாடலின் போது அவர் இந்தக் கருத்துக்களைத் தெரிவித்தார்.

போதைப்பொருள் ஒழிப்புக்குக் கிராம மக்களின் ஈடுபாடு மிக அவசியம் எனவும் இதன்போது அமைச்சர் வலியுறுத்தினார்.

# அதிவேக நெடுஞ்சாலை விபத்தில்
## ஒருவர் உயிரிழப்பு, இருவர் படுகாயம்

(கொழும்பு)
மத்திய அதிவேக நெடுஞ்சாலையில் நேற்று அதிகாலை ஏற்பட்ட விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், மேலும் இருவர் காயமடைந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



குருணாகல் சந்திப்புப் பகுதியிலிருந்து மத்திய அதிவேக நெடுஞ்சாலைக் குள் நுழைந்த கார் ஒன்று, முன்னால் பயணித்த லொறியின் பின்புறத்தில் மோதுண்டு இந்த விபத்து நிகழ்ந்துள்ளது.

விபத்தில் காரில் பயணித்த ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

மேலும், இருவர் பலத்த காயமடைந்து குருணாகல் பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

விபத்து குறித்த மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (நி)

# தொழிலுக்காக வெளிநாடு
## செல்வோர் எண்ணிக்கை வீழ்ச்சி
### மத்திய வங்கி தரவுகள் தெரிவிப்பு

(கொழும்பு)
2025 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதல், மத்திய கிழக்கு போன்ற வெளிநாடுகளுக்குத் தொழில் நிமித்தம் செல்லும் இலங்கையர்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளதாக, மத்திய வங்கி தரவுகள் தெரிவிக்கின்றன.

இலங்கையின் பொருளாதார நடவடிக்கைகள் மீட்சி அடைந்துள்ள நிலையில், இந்த எண்ணிக்கை குறைவடைந்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி, 2025ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 25 ஆயிரத்து 873 பேரும், பெப்ரவரி மாதம் 22 ஆயிரத்து 271 பேர் தொழில் நிமித்தம் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர்.

அத்துடன், மார்ச் மாதம் 21 ஆயிரத்து 552 பேரும், ஏப்ரல் மாதம் 22 ஆயிரத்து 11 பேரும் தொழில் நிமித்தம் வெளிநாடுகளுக்குப் பயணித்துள்ளனர்.

இந்த பின்னணியில், 2025 ஆம் ஆண்டு ஜூன் மாதம் தொழில் நிமித்தம் வெளிநாடுகளுக்குச் செல்வோரின் எண்ணிக்கை 5 சதவீதம் குறைவடைந்து மொத்தமாக, ஒரு இலட்சத்து 43 ஆயிரத்து 37 ஆக பதிவு செய்யப்பட்டதாக மத்திய வங்கித் தரவுகள் தெரிவிக்கின்றன. (நி)

# 2,097 ஆயுதங்கள்
## இதுவரை மீட்பு

(கொழும்பு)
2025 ஆம் ஆண்டின் ஜனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து ஒக்டோபர் மாதம் 23 ஆம் திகதி வரையான காலப் பகுதிக்குள் நாடளாவிய ரீதியில் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனையில் 2,097 ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அதன்படி, ரி-56 ரக துப்பாக்கிகள் 67, கைத்துப்பாக்கிகள் 73, ரிவால்வர் ரக துப்பாக்கிகள் 50 மற்றும் 1,907 ஏனைய ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## தெற்காசிய மெய்வல்லுநர் சம்பியன்ஷிப்; இலங்கைக்கு இரண்டாமிடம்



இந்தியாவின் ராஞ்சியில் நடைபெற்ற 4 ஆவது தெற்காசிய மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டியில் இலங்கை இரண்டாம் இடத்தை பெற்றுக் கொண்டுள்ளது.

பல்வேறு போட்டிகளில் இலங்கை இந்தியாவிற்கு கடும் சவால் விடுத்து வெற்றிகளை ஈட்டிக் கொண்டது.

இந்தப் போட்டித் தொடரில் இலங்கை அணி 16 தங்கம் 14 வெள்ளி 10 வெண்கலம் உள்ளடங்கலாக 40 பதக்கங்களை வென்று இரண்டாம் இடத்தை பெற்றுக் கொண்டது.

இதேவேளை, 20 தங்கம் 20 வெள்ளி, 18 வெண்கலம் என்ற அடிப்படையில் இந்தியா முதல் இடத்தை பெற்றுக் கொண்டது.

இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையில் நான்கு தங்கப்பதக்கங்கள் மட்டுமே இடைவெளி காணப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கை இந்தியா தவிர்ந்த வேறு எந்த ஒரு நாடும் இந்த போட்டி தொடரில் தங்கப்பதக்கம் வென்றெடுக்கவில்லை.

பதக்கப் பட்டியலில் நேபாளம் மூன்றாவது இடத்தைப் பிடித்தது.

பங்களாதேஷ் மற்றும் மாலைதீவுகள் தலா ஒரு வெண்கலப் பதக்கத்தைப் பெற்றன.

பூட்டான் பதக்கம் எதுவும் இல்லாமல் போட்டியை முடித்தது.

இந்தப் போட்டி தொடரில் இந்தியா, இலங்கை, பூட்டான், நேபாளம், மாலைதீவு மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளின் விளையாட்டு வீர வீராங்கனைகள் பங்கேற்று இருந்தனர்.

இலங்கையின் சார்பில் சுமார் 60 வீர வீராங்கனைகள் இந்தப் போட்டி தொடரில் பங்கேற்று இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (3)

## தேசியமட்ட வலைப்பந்தாட்ட போட்டியில் யாழ்.மாவட்ட அணி இரண்டாமிடம்





அகில இலங்கை இளைஞர் அணிகளுக்கு இடையிலான தேசிய மட்ட வலைப்பந்தாட்ட போட்டியில் ஆண்கள் மற்றும் பெண்கள், யாழ். மாவட்ட இளைஞர் அணியினர் இறுதியாட்டங்களில் பலத்த போராட்டத்தில் வெள்ளிப் பதக்கத்தை கைப்பற்றியுள்ளனர்.

அகில இலங்கை இளைஞர் அணிகளுக்கு இடையிலான தேசிய மட்ட வலைப்பந்தாட்ட போட்டி கம்பஹாவில் நடைபெற்றது.

ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் யாழ்.மாவட்ட இளைஞர் அணியை எதிர்த்து இரத்தினபுரி மாவட்ட இளைஞர் அணி மோதியது. முதல் பாதியாட்டத்தில் இரத்தினபுரி மாவட்டம் இளைஞர் அணி அடுத்தடுத்து புள்ளிகளை பெற யாழ். மாவட்ட அணி ஆட்டத்தில் தடுமாற்றம் கண்டது. இருப்பினும் இரண்டாவது பாதியாட்டத்தை சாதகமாக்கி தமது அபாரமான ஆட்டத்தை யாழ். மாவட்ட இளைஞர் அணி வெளிப்படுத்தி ஆட்டத்தை சமநிலைக்கு கொண்டு வந்து தொடர்ந்த வண்ணம் இருந்தனர். இருப்பினும் ஆட்ட நேர முடிவில் யாழ்.மாவட்ட இளைஞர் அணி 18:19 என்ற ஒரு புள்ளி வித்தியாசத்தில் தோல்வியடைந்து வெள்ளிப்பதக்கத்தை கைப்பற்றினர்.

அத்துடன் பெண்களுக்கான இறுதியாட்டத்தில் யாழ்.மாவட்ட இளைஞர் அணியை எதிர்த்து குருநாகல் மாவட்ட இளைஞர் அணி மோதியது. இதிலும் இறுதிவரை போராடிய யாழ்.மாவட்ட இளைஞர் அணி 41:26 என்ற கணக்கில் தோல்வியடைந்து வெள்ளிப் பதக்கத்தை கைப்பற்றினர். (3)

## 19 வருட கிரிக்கெட் வாழ்க்கையை வெற்றியோடு முடிக்க விரும்பினேன்

### நியூசிலாந்து கப்டன் வருத்தம்

13 ஆவது மகளிர் உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் இந்தியா மற்றும் இலங்கையில் நடைபெற்றது. நேற்று முன்தினம் விசாகப்பட்டினத்தில் காலை 11 மணிக்கு ஆரம்பமாகிய 27 ஆவது லீக் ஆட்டத்தில் இங்கிலாந்து- நியூசிலாந்து அணிகள் விளையாடின. இதில் நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பாட்டம் செய்த நியூசிலாந்து அணி ஆரம்பம் முதலே இங்கிலாந்து பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது. 38.2 ஓவர்கள் தாக்குப்பிடித்த நியூசிலாந்து 168 ஓட்டங்களில் ஆட்டமிழந்தது. இங்கிலாந்து தரப்பில் லின்சே ஸ்மித் 3 விக்கெட்டுகளும், நாட் ஸ்கைவர் பிரண்ட் மற்றும் அலைஸ் கேப்சி தனா 2 விக்கெட்டுகளும் வீழ்த்தினர்.

இதனையடுத்து 169 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கி இங்கிலாந்து விளையாடியது. தொடக்கம் முதல் இங்கிலாந்து அணி வீராங்கனைகள் அதிரடி காட்டினர். இறுதியில் 29.2 ஓவர்களில் 2 விக்கெட் இழப்பிற்கு இங்கிலாந்து அணி 172 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது.

இந்த தொடரோடு சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக நியூசிலாந்து அணி கப்டன் ஷோபி டிவைன் அறிவித்திருந்தார். அரையிறுதிக்கு முன்னேறாததால் நியூசிலாந்து அணி தொடரிலிருந்து வெளியேறியது. இதனால் ஷோபி டிவைனின் இறுதி போட்டி தோல்வியில் முடிந்தது. இது தொடர்பாக ஷோபி டிவனின் கூறியதாவது, ஏமாற்றம் அளிக்கிறது. எனது கிரிக்கெட் வாழ்க்கையை உயர்ந்த இன்னிங்ஸ் மற்றும் வெற்றியுடன் முடிக்க விரும்பினேன். இங்கிலாந்து அணிக்கு பாராட்டு தெரிவிக்க வேண்டும். அவர்கள் துடுப்பாட்டத்தில் சிறப்பாக செயற்பட்டனர் என்று தெரிவித்துள்ளார்.

159 ஒருநாள் போட்டிகளில் 9 சதம், 18 அரைசதங்களுடன் 4279 ஓட்டங்கள் எடுத்துள்ளார். 146 ரி-20 போட்டிகளில் 1 சதம், 21 அரைசதங்களுடன் 3,431 ஓட்டங்கள் எடுத்துள்ளார். ஒருநாள் போட்டிகளில் 111 விக்கெட்டுகளும், ரி-20 யில் 119 விக்கெட்டுகளும் வீழ்த்தியுள்ளார். (3)

## தீவிர சிகிச்சைப் பிரிவில் ஸ்ரேயஸ் ஐயர் அனுமதி



இந்திய கிரிக்கெட் வீரர் ஸ்ரேயஸ் ஐயர் அவுஸ்திரேலியாவிலுள்ள மருத்துவமனையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அவுஸ்திரேலிய அணிக்கெதிரான 3ஆவது ஒருநாள் போட்டியில் பிடியெடுக்க முயன்றபோது அவரது விலா எலும்பில் முறிவு ஏற்பட்டது.

இந்தநிலையில் உடலுக்குள் இரத்தக் கசிவு இருப்பதால் அவர் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதன்படி அவர் சுமார் 5 முதல் 7 நாட்கள் மருத்துவமனையில் இருப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது. (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேள்வி அறிவித்தல்

## வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்

1. தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு, வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய், அவர்கள் தகுதி வாய்ந்த வழங்குநர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்வரும் அட்டவணைகளில் விபரிக்கப்பட்டவாறு கோருகின்றார்.

2. இக்கேள்வி கோரலானது தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கோரப்படுகின்றது.

3. இக்கேள்வியானது பொருத்தமான வியாபார அல்லது கம்பனிப்பதிவுகளை கொண்டுள்ளதும், கறுப்புப் பட்டியலில் (Black list) சேர்த்துக்கொள்ளப்படாததுமான கேள்விதாரருக்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

4. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதி ஒன்றை வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய் எனும் முகவரியில் 2025.10.28 ஆம் திகதி தொடக்கம் 2025.11.10 ஆம் திகதி வரை வேலை நாட்களில் மு.ப 09.00 தொடக்கம் பி.ப 03.00 மணி வரை மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.2,000.00 (வரி நீங்கலாக) செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.

5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்வியை இரு பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதி, நகல்பிரதி என தனித்தனி உறைகளிட்டு தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு, வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய் எனும் முகவரிக்கு 2025.10.11 ஆம் திகதி அன்று மு.ப 10.30 மணிக்கு முன்பதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் செயலாளர், வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, யாழ் வீதி மானிப்பாய் எனும் முகவரியில் (தொலைபேசி இலக்கம் 021 225 6651)இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

| இல | கேள்வி எண் | விபரம் | தேவைப்படும் எண்ணிக்கை | பொருள் வழங்கப்பட வேண்டிய காலம் | கேள்விப்பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணைவைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| 01 | NP/14/41(16)/03/ A5/AC/2025/01 | Supply and fitting 9000BTU Air Conditioner | 01 | கொள்வனவு கட்டளை வழங்கிய திகதியில் இருந்து 30 நாட்கள் | 4500.00 | 27.01.2026 |
| | | Supply and fitting 18000BTU Air Conditioner | 01 | | | |
| 02 | NP/14/41(16)/03/ A5/Com/2025/01 | Supplying of DESKTOP COMPUTER | 04 | கொள்வனவு கட்டளை வழங்கிய திகதியில் இருந்து 30 நாட்கள் | 12000.00 | 27.01.2026 |
| 03 | NP/14/41(16)/03/ A5/Photo/2025/01 | Supplying of PHOTO COPIER Machine | 03 | கொள்வனவு கட்டளை வழங்கிய திகதியில் இருந்து 30 நாட்கள் | 16500.00 | 27.01.2026 |

**தலைவர்,**
**உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்.** **2025.10.28**

(C-4200)

# ஆதனப்பெயர்மாற்ற அறிவித்தல்

30.08.2025 சனிக்கிழமை அன்று வலம்புரியில் பிரசுரிக்கப்பட்ட ஆதனப் பெயர் மாற்ற அறிவித்தலில் கீழ்காணும் 2 அட்டவணைகள் பிரசுரிக்கத் தவறியமையால் இது பிரசுரிக்கப்படுகிறது. இவற்றையும் இணைத்து வாசிக்கவும்.

**காரைநகர் பிரதேச சபை : வடக்கு உப அலுவலகம் வேம்படி**
**விண்ணப்பதாரரின் பெயர் : நவரத்தினம் துவாரகன்**

| ஆதனம் | மாகாணம் | மாவட்டம் | பிரதேச செயலர் பிரிவு | கிராம சேவகர் பிரிவு | இறை | ஆதனப் பெயர் |
|---|---|---|---|---|---|---|
| 3 | வட மாகாணம் | யாழ்ப்பாணம் | காரைநகர் | ஜே/48 | காரை நகர் மத்தி | வரதா |

| ஆதனம் | கிழக்கு | வடக்கு | மேற்கு | தெற்கு |
|---|---|---|---|---|
| 03 | முத்தையா முத்துராஜாவின் ஆதனமும், இரத்தினம் சின்னையாவின் ஆதனமும், குணலட்சுமியினதும் மற்றையவர்களினதும் ஆதனமும் | ஒழுங்கை | கோவளம் வீதி | ஆறுமுகம் சுந்தரேஸ்வரனின் ஆதனம் |

**தவிசாளர், பிரதேச சபை, காரைநகர்.** (5755)

# பருத்தித்துறை பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் வ/து

## பகிரங்க ஏலவிற்பனை

நீண்ட காலமாக பாவனையற்றுள்ள மரத்தளபாட வகைகள் மற்றும் பழுதடைந்துள்ள உபகரணங்கள் என்பன பகிரங்கமாக ஏலவிற்பனை செய்யப்படவுள்ளது.

**காலம்- 31.10.2025 வெள்ளிக்கிழமை மு.ப 9.30 - பி.ப 6.30 மணிவரை**
**இடம் - சங்க தலைமை அலுவலகம், 1 ஆம் குறுக்குத் தெரு, பருத்தித்துறை**

மேலதிக தகவல்களுக்கு :-
தலைவர், பருத்தித்துறை பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்,
பருத்தித்துறை.
077 289 0474, 077 441 7870 (C-4199)

# உலகில் சிறந்த நகரங்களில் ஒன்றாக யாழ்ப்பாணம்

(கொழும்பு)

2026 ஆம் ஆண்டில் உலகில் பார்வையிடக் கூடிய சிறந்த நகரங்களில் ஒன்றாக யாழ்ப்பாணம் பெயரிடப்பட்டுள்ளது.

உலகளாவிய பயண ஊடக நிறுவனமான லோன்லி பிளேனட் நிறுவனம் இதனை அறிவித்துள்ளது.

அத்துடன், இது தனித்துவமான கலாசார பாரம் பரியத்தை கொண்ட இடமாக அமைந்துள்ளமையினால், உலகளாவிய ஈர்ப்பை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது.

லோன்லி பிளானட்டின் "சிறந்த பயணம் 2026" இன் இத்தாலிய மொழி பதிப்பு கடந்த 22 ஆம் திகதி வெளியிடப்பட்டுள்ள உத்தியோக பூர்வ அறிவிப்பில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தனித்துவமான அங்கீகாரம் இலங்கையின் சர்வதேச ஈர்ப்பை மேம்படுத்தவும் சுற்றுலாப் பயணிகளின் வருகையை அதிகரிக்கவும் உதவும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அத்துடன், சுற்றுலாத் துறையில் சமூக அடிப்படையிலான சுற்றுலா அனுபவங்களை ஊக்குவிக்கவும் ஒரு சக்திவாய்ந்த சந்தைப்படுத்தல் கருவியாக செயற்படும் என்றும் எதிர் பார்க்கப்படுகிறது. (நி)

## வெளிநாட்டிலுள்ள இலங்கையர்களுக்கு

# விரைவில் வாக்குரிமை- விஜிதஹேரத்

(கொழும்பு)

எதிர் காலத்தில், வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்களுக்கு வாக்குரிமையை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என வெளிவிவகார, வெளி நாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

பொதுநிர்வாக அமைச்சின் கீழ் ஏற்பாடுகள் தற்போது இடம்பெற்று வருவதாக அமைச்சர் விஜித ஹேரத் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை வெளி நாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் 40 ஆவது வருட நிறைவை முன்னிட்டு நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இதனை குறிப்பிட்டுள்ளார்.


அமைச்சர் மேலும் கருத்து தெரிவிக்கையில், வெளிநாட்டில் வசிக்கும் அனைவருக்கும் வாக்களிக்க தேவையான வசதிகளை வழங்கவும் தேவையான சட்ட நிலைமைகளை உருவாக்கவும் பொது நிர்வாக அமைச்சு ஏற்கனவே விசேட குழுவை நியமித்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

மேலும், வெளிநாட்டில் வசிக்கும் அனைவருக்கும் பங்களிப்பு ஓய்வூதிய முறையை அறிமுகப்படுத்த தேவையான சட்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாகவும் இதன்போது வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார். (நி)


# FORKLIFT வாடகைக்கு விடப்படும்

FORKLIFT வாகனம் மணித்தியால அடிப்படையில் வாடகைக்கு விடப்படும்.

CLAMP MODEL FORKLIFT



076 097 3121


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யாழில் மோட்டார் சைக்கிளை மோதித்தள்ளியது ஹயஸ்!

## இருவர் காயம்

(அராலி)

யாழ்ப்பாணம் - தட்டாதெரு பகுதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற விபத்து ஒன்றில் இருவர் காயமடைந்துள்ளனர்.

மோட்டார் சைக்கிள் ஒன்றில் இருவர் சென்று கொண்டிருந்த வேளை எதிர் திசையில் இருந்து வந்த ஹயஸ் வாகனம் மோட்டார் சைக்கிள் மீது மோதியுள்ளது. இதில் மோட்டார் சைக்கிளில் சென்ற இருவரும் காயமடைந்துள்ளனர்.

விபத்தில் மோட்டார் சைக்கிள் பலத்த சேதமடைந்தது டன் விபத்தினை ஏற்படுத்திய ஹயஸ் வாகனம் பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

விபத்து சம்பவம் குறித்து விசாரணைகளை யாழ்ப்பாணம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (8-104)

# யாழ்.பல்கலை ஊழியர்களின் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு

## துணைவேந்தர் உறுதி

(யாழ்ப்பாணம்)

போதனை சாரா ஊழியர்களின் பிரச்சினைகள் தொடர்பில் சிறப்புக் கவனம் செலுத்தி, தாமே நேரடியாக கையாண்டு, ஓரிரு வாரங்களுக்குள் தீர்வுகளை வழங்குவதாக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் சி.சிறிசற்குணராஜா உறுதி அளித்தார்.


யாழ்.பல்கலைக்கழக போதனைசாரா ஊழியர்கள், துணைவேந்தரை அவரது அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடிய போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அக்கலந்துரையாடலின் போது, யாழ்.பல்கலைக்கழக போதனை சாரா ஊழியர்களின் முன்வைக்கப்பட்ட நியாயங்களையும் பிரச்சினைகளையும் துணைவேந்தர் ஏற்றுக்கொண்டதுடன், பல்கலைக்கழக நிர்வாகத்தினால் வெளியிடப்பட்ட பத்திரிகைச் செய்தி உட்பட சில விடயங்கள் தனக்கு தெரியாதவை எனவும் தெரிவித்தார்.

"இம்முறை தானே நேரடியாக செயற்படுவேன்" என துணைவேந்தர் உறுதியளித்தார். (ரி-8)

# மின்சார வேலியில் சிக்கிய யானை பரிதாபமாக உயிரிழப்பு

(வவுனியா)



வவுனியா - கனகராயன் குளம் குறிசுட்ட குளம் பகுதியில் விவசாய காணி ஒன்றுக்கு போடப்பட்டிருந்த மின்சார வேலியில் சிக்கி யானை ஒன்று பரிதாபமாக உயிரிழந்துள்ளது.

நேற்றுக் காலை விவசாய காணிக்குச் சென்ற விவசாயி யானை ஒன்று உயிரிழந்து கிடந்ததை அவதானித்ததையடுத்து அயலவர்களுக்கும் கனகராயன்குளம் பொலிஸாருக்கும் தகவலை வழங்கியுள்ளார்.

சம்பவ இடத்துக்குச்சென்ற பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அத்துடன் வனஜீவராசிகள் திணைக்களத்திற்கும் தகவல் வழங்கப்பட்டது. (8)

# புன்னாலைக்கட்டுவன் பகுதியில் ஹெரோயின் வியாபாரி கைது

(அராலி)

சுன்னாகம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புன்னாலைக் கட்டுவன் பகுதியில் 33 வயதுடைய ஹெரோயின் வியாபாரி ஒருவர் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது அவரிடமிருந்து 2 ஆயிரத்து 400 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில், சுன்னாகம் பொலிஸ் நிலைய பாரிய குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரியின் தலைமையிலான பொலிஸ் குழுவினரால் இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரிடம் விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் அவரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (8-104)

# அறிவுத்திருக்கோவிலில் யோகா பயிற்சிகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

மனவளக்கலைமன்ற அறக்கட்டளையின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் அறிவுத்திருக் கோவிலில் இந்த வாரத்திற்கான மனவளக்கலைப் பயிற்சிகள் அறிமுகவுரையுடன் இன்று மாலை 5 மணிக்கு இல.81 பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அறிவுத் திருக்கோவிலில் ஆரம்பமாகவுள்ளது.

சக்கரை நோய் கட்டுப்பட, ஆஸ்துமா் சளித் தொல்லை நீங்க, இரத்த அழுத்தம் கட்டுப்பட, தூக்கம் சம்பந்தப்பட்ட பிரச்சினை தீர, தைராய்ட்டு பிரச்சினை தீர, எளிய முறை உடற்பயிற்சிகள், எளிய முறை குண்டலினி தியானப் பயிற்சிகள், உயிர் வளத்திற்கான காயகல்பப் பயிற்சிகள் மற்றும் சூரிய நமஸ்காரம் என்பன வழங்கப்படும்.

பயிற்சிகளில் 14 வயதிற்கு மேற்பட்ட ஆண் மற்றும் பெண் இருபாலரும் பங்குபெறலாம்.

பயிற்சிகளை தமிழ்நாட்டில் இருந்து வருகை தந்துள்ள மனவளக்கலை பேராசிரியர் கே. ஆர். முனிரத்தினம் அவர்கள் வழங்குவார்கள்.

மேலதிக தகவல்களுக்கு 021 222 2772 எனும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும். (3)

# செம்மணி மனிதப்புதைகுழிக்கு நீதிவேண்டி இன்று கவனயீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை மெதடிஸ்த திருச்சபை வடக்கு-கிழக்கு திரு மாவட்ட அவையின் நீதிக்கும் சமாதானத்துக்குமான பணிக்குழுவினரால் "மனித உரிமைகள் நீதி தேடிய பயணத்தில் பாதிக்கப்பட்ட மக்களோடு உடன் இருத்தல்" எனும் கருப்பொருளில் செம்மணி மனித புதைகுழிக்கு நீதி வேண்டி கவனயீர்ப்பு நடவடிக்கை முன்னெடுக்கப் படவுள்ளது.

இக் கவனயீர்ப்பு இன்று செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு செம்மணி அணையா விளக்கிற்கு முன் பாக வடக்கு-கிழக்கு திரு மாவட்ட அவை தலைவர் அருட்பணி அ.சாமுவேல் சுபேந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ளது. (3)

# சந்தைகளில் நேற்றைய விலை

பொருளாதார மத்திய நிலையம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மட்டுவில் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 200 | 200 | 320 | 200-250 | 150 |
| உருளைக்கிழங்கு | 220 | 220 | 220 | 240 | 230 | 220 |
| பச்சைமிளகாய் | 250 | 250 | 300 | 300 | 220 | 170 |
| தக்காளி | 250 | 250 | 250 | 300 | 150 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 200 | 280 | 200 | 200 | 80 |
| கோவா | 200 | 220 | 200 | 200 | 180 | 130 |
| கரட் | 280 | 250 | 250 | 300 | 180 | 150 |
| பூசணி | 80 | 80 | 100 | 100 | 50 | 25 |
| புடோல் | 200 | 200 | 150 | 300 | -- | -- |
| வாழைக்காய் | 100 | 80 | 100 | 200 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 300 | 200-300 | 250 | 350 | 240 | 230 |
| பெரிய வெங்காயம் | 180 | 180 | 150 | 200 | 150 | 135 |
| பாகற்காய் | 600 | 550 | 500 | 800 | 500 | 300 |
| வெண்டக்காய் | 150 | 250 | 200 | 300 | 150 | 120 |
| கருணைக் கிழங்கு | 350 | 250 | 250 | 300 | 220 | 200 |
| பயற்றங்காய் | 550 | 200 | 500 | 800 | 500 | 300 |
| லீக்ஸ் | 280 | 250 | 250 | 300 | 180 | 140 |
| பீற்றூட் | 150 | 120 | 250 | 200 | 100 | 80 |
| கறிமிளகாய் | 400 | 550 | 400 | 600 | 400 | 300 |
| முருங்கைக்காய் | 200 | 250 | 250 | 400 | 180 | 130 |
| போஞ்சி | 400 | 450 | 400 | 600 | 450 | 350 |
| கத்தரிதம்புள்ள | 200 | 160 | 300 | 280 | -- | -- |
| கீரை - 1 பிடி | 150 | 80-160 | 150 | 150 | -- | - |
| தேசிக்காய் | 1500 | 1800 | 2000 | 2000 | -- | -- |
| தேங்காய் (ஒன்று) | 200 | 210 | 150 | 150-200 | -- | -- |
| இராசவள்ளி | 800 | 900 | 1000 | 800 | -- | 800 |
| வெங்காயப்பூ | 400 | 350 | 500 | 500 | -- | -- |
| முள்ளங்கி | 150 | 180 | 150 | 250 | -- | 60 |
| பொன்னாங்காணி | 120 | 80 | 100 | 60 | -- | 35 |
| வல்லாரை | 80 | 60 | 80 | 80 | -- | 40 |
| [illegible] | 150 | 150 | 100 | 200 | | -- |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முறைகேடாக சேகரித்த சொத்துக்கள்! யாழில் தீவிரமடையும் விசாரணைகள்

(யாழ்ப்பாணம்)

**வாள்வெட்டு மற்றும் போதைப்பொருள் கடத்தல் என்பவற்றில் ஈடுபட்டு, சட்ட விரோதமாகவும் முறைகேடாகவும் சொத்துச் சேர்த்த சந்தேகத்தில் 11 பேருக்கு எதிராக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றது.**

குறித்த விடயத்தை யாழ்ப்பாணம் பிராந்திய சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜே.பி.எஸ்.ஜெயமஹா தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது, போதைப்பொருள் கடத்தல், வன்முறைகள், வட்டிக்கு விடுதல் உள்ளிட்ட சட்ட விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டுச் சொத்துச் சேர்த்தவர்களுக்கு எதிராக நாடளாவிய ரீதியில் அண்மைக் காலமாக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இதுவரை 11 பேர் இந்த விசாரணை வளையத்துக்குள் கொண்டுவரப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களுக்குச் சொந்தமான சொகுசுக் கார்கள், ஆடம்பர விடுதிகள், இறால் பண்ணைகள், உள்ளூரிலும் வெளிமாவட்டங்களிலும் பல்பொருள் அங்காடிகள் என்பன உள்ளன.

அந்தச் சொத்துக்கள் தொடர்பில் முழுமையான புலன் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

அவை சட்டவிரோதமாகப் பெறப்பட்டவை என்பது உறுதிப்படுத்தப்பட்டால் அந்தச் சொத்துக்கள் அனைத்தும் முடக்கப்படும் என்றார். (8)

## போக்குவரத்து அபராதங்கள் ஒன்லைனில் பொலிஸாருக்கு தெளிவூட்டல்

(வவுனியா)

போக்குவரத்து பொலிஸாரால் விதிக்கப்படும் அபராதங்களை ஒன்லைனில் செலுத்துவது தொடர்பான தெளிவூட்டல் செயலமர்வு வவுனியா சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

போக்குவரத்து சாரதிகளின் செயற்பாடுகளை இலகுபடுத்தும் முகமாக போக்குவரத்து பொலிஸாரால் விதிக்கப்படும் அபராதங்களை அவ்விடத்திலேயே ஒன்லைன் மூலம் செலுத்தும் நடைமுறை நாடு பூராகவும் நடைமுறைக்கு வந்துள்ளது.

அதனடிப்படையில், வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களில் இதனை நடைமுறைப்படுத்தும் வகையில் போக்குவரத்து பொலிஸாருக்கு தெளிவூட்டல் செயலமர்வு இடம்பெற்றது.

இதில் வவுனியா- மன்னார் மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் இந்திக்க கப்பு கொட்டுவ, சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் சோமரட்ன விஜயமுனி மற்றும் பொலிஸ் அதிகாரிகள், போக்கு வரத்துப் பொலிஸார் எனப் பலரும் கலந்து கொண்டனர். (8-250)

(தருமபுரம்)

போக்குவரத்து அபராதங்களை செலுத்துவது குறித்து கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த போக்குவரத்து பொலிஸாருக்கான விழிப்புணர்வு கிளிநொச்சி மாவட்ட செயலக திறன்விருத்தி மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

குறித்த விழிப்புணர்வு செயலமர்வில் Harsha Purasinghe, Chairman, Digital Task Force Ministry of transport, highways and Urban Development, வன்னி பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர், கிளிநொச்சி முல்லைத்தீவு பிரதிப் பொலிஸ்மா அதிபர் உள்ளிட்ட போக்குவரத்து பொலிஸார் கலந்து கொண்டனர்.

இன்றைய தினம் வட மாகாணத்திற்கான போக்குவரத்து அபராதங்களை Gov pay மூலம் செலுத்தும் ஆரம்ப நிகழ்வு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் தலைமையில் கிளிநொச்சியில் நடைபெறவுள்ளது. (8-316)

## வலி.தென்மேற்கு பிரதேச சபையில் 'அனர்த்தக் குறைப்புக்குழு' நியமனம்

(யாழ்ப்பாணம்)

வலி.தென்மேற்கு பிரதேச சபையானது இயற்கை அனர்த்தங்களால் ஏற்படும் பாதிப்புக்களை கருத்தில் கொண்டு "அனர்த்தக் குறைப்புக்குழு" ஒன்றை நியமித்துள்ளது.

கடந்த 23 ஆம் திகதி வலி.தென்மேற்குப் பிரதேச சபைத் தவிசாளர் கந்தையா ஜெசிதன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் மானிப்பாய் பட்டினம் கிராமம், பண்டத்தரிப்பு பட்டினம் கிராம் என இரு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு இவ் இரு குழுக்களும் வெள்ள அனர்த்தம், புயலால் ஏற்படும் பாதிப்புக்களால் இடம்பெயர்ந்து வாழும் குடும்பங்களுக்கு உணவு, குடிநீர், சுகாதாரம் என்பவற்றில் உதவியாகச் செயற்படும்.

தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கங்கள் மானிப்பாய் 021 225 6653, பண்டத்தரிப்பு-021 225 2021, பொதுஇலக்கம் 078 548 4086. (8)

## யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம் நடத்தும் சிவராமலிங்கம்பிள்ளை நூற்றாண்டு விவாதப்போட்டி

(யாழ்ப்பாணம்)


தமிழறிஞரும் யாழ். இந்துக் கல்லூரியின் முன்னாள் பிரதி அதிபருமாகிய கலாநிதி க. சிவராமலிங்கம்பிள்ளையின் நூற்றாண்டையொட்டி வடமாகாணப் பாடசாலைகளிடையே விவாதச் சுற்றுப் போட்டி ஒன்றை யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம் நடத்தவுள்ளது.

இப்போட்டியில் பங்குபற்றும் ஆர்வமுடைய பாடசாலைகள் போட்டியாளர் முழுப்பெயர், பொறுப்பாசியர் பெயர், தொலைபேசி இலக்கம் என்பவற்றைக் குறிப்பிட்டு தமது பாடசாலை அதிபரின் உறுதிப் படுத்தலுடன் எதிர்வரும் 08.11.2025 இற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பொதுச் செயலாளர், யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம், இல 28, குமாரசாமி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு விண்ணப்பிக்குமாறும் யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கச் செயலாளர் கோரியுள்ளார்.

மேலதிக விபரங்கள் தேவைப்படுவோர் போட்டி இணைப்பாளர் தெ. ஹர்சனை 075 955 6041 / 076 755 6041 என்ற இலக்கத்தில் தொடர்பு கொள்ளலாம் எனவும் தேசிய மட்டத் தமிழ்த்தினப் போட்டிகளின் சுற்று நிருபத்தைத் தழுவிய நிலையில் நவம்பர் மாத இறுதியில் போட்டிகள் முன்னெடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (8-33-104)

## சட்டவிரோத மணல் அகழ்வு மக்கள் குடிபெயரும் நிலை

### பொது அமைப்புக்கள் சுட்டிக்காட்டு



(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தின் குஞ்சுப்பரந்தன், தட்டுவன் கொட்டி, பன்னங்கண்டி ஆகிய பகுதிகளில் நாளாந்தம் சட்ட விரோத மணல் அகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன. இந்த நிலை தொடருமாயின் குறித்த கிராம மக்கள் குடி பெயரும் நிலையேற்படும் என பல்வேறு பொது அமைப்புக்களும் சுட்டிக்காட்டியுள்ளன.


சட்டவிரோத மணல் அகழ்வுகள் இடம்பெற்று வருவது தொடர்பில் தொடர்ச்சியான முறைப்பாடுகள் மாவட்ட உயர்மட்ட அரச அதிகாரிகள் பொலிஸ் உயரதிகாரிகள் மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு ஆகியவற்றிற்கு பிரதேச பொது அமைப்புகள் தொடர்சியாக முன்வைத்து வருகின்றன.

ஆனாலும் இது தொடர்பில் எந்தவிதமான முன்னேற்றங்களும் இதுவரை ஏற்படவில்லை எனப் பலரும் குறிப்பிடுகின்றனர்.

தற்போது இரணைமடுக் குளத்தின் கீழான கனகராயன் ஆறு பன்னங்கண்டி மற்றும் செருகன் கல்லாறு, தட்டுவன் கொட்டி போன்ற பகுதிகளில் தொடர்ச்சியாக மணல் அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து மணல் அகழ்வதற்கான அனுமதிகளோ அல்லது வழித்தட அனுமதிகளோ இல்லாது இவ்வாறுசட்ட விரோத செயற்பாடுகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இது தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறு பொது அமைப்புக்களால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (8-315)



கிளிநொச்சி மாவட்டத்தின் விசுவமடு பகுதியில் அமைந்துள்ள தேராவில் மாவீரர் துயிலுமில்லத்தில் எதிர்வரும் நவம்பர் மாதம் 27ஆம் திகதி நடைபெறவுள்ள மாவீரர் நாள் நிகழ்வினை முன்னிட்டு நேற்று முன்தினம் சுாயிற்றுக்கிழமை ஏற்பாட்டுக் குழுவினரால் மண்ணுக்காக மரணித்த மாவீரர்களின் அஞ்சலி நிகழ்வுடன் சிரமதானப் பணிகளும் முன்னெடுக்கப்பட்டன. (படம் தேவானந்தன்)


விற்பனைக்கு

Forklift Komatsu 2 ton (petrol)

வாகனம் விற்பனைக்குண்டு.

தொடர்பு :


076 097 3121

(8)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## உலகின் வேகமான ரயில் சாதனை படைத்தது சீனா



(பீஜிங்)

உலகின் அதிவேக புல்லட் ரயிலின் சோதனை ஓட்டத்தை வெற்றிகரமாக நடத்தி சீனா புதிய சாதனை படைத்துள்ளது.

மக்களின் தேவைகளுக்கு ஏற்ப உலக நாடுகள் தொழில் நுட்பத்தையும் வளர்த்து வருகின்றன.

அதிலும் போக்குவரத்து தேவையை பூர்த்தி செய்ய ஆசிய நாடுகளான சீனா, ஜப்பான் உள்ளிட்டவை அதிவேக புல்லட் ரயில்களை இயக்கி வருகின்றன.

ஜப்பானின் எல்.ஓ., சீரிஸ் மாக்லேவ் ரயில் மணிக்கு 603 கி.மீ., வேகத்தில் பயணித்து சாதனை படைத்திருந்தது. அதனை முறியடிக்கும் வகையில், மணிக்கு 896 கி.மீ., வேகத்தில் இயங்கக்கூடிய "சி.ஆர்.,- 450" என்று பெயரிடப்பட்ட ரயிலை சீனா உருவாக்கியுள்ளது.

அந்த ரயில் சீனாவின், ஷாங்காய் - செங்டு வழித்தடத்தில் இயக்கப்பட இருக்கிறது. "சி.ஆர்., - 450" புல்லட் ரயில் தொழில்நுட்ப ரீதியில் பெரிய அளவில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

ரயில் எஞ்சினின் முனைப் பகுதி பருந்து அலகு போன்ற ஏரோடைனமிக் வடிவத்தில் 45 அடி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

வேகத்தை மேம்படுத்த, ரயிலின் ஒட்டுமொத்த காற்று எதிர்ப்பை 22 சதவீதம் குறைத்துள்ளனர்.

20 சென்றிமீற்றர் அளவுக்கு ரயிலின் மேற்கூரை உயரம் குறைக்கப்பட்டுள்ளது.

மேலும் முந்தைய மாடலான "சி.ஆர்., - 400" காட்டிலும் 55 தொன்கள் எடை குறைவானது.

இந்த ரயில் வெறும் 4 நிமிடங்கள் 40 வினாடிகளில் 350 கி.மீ., வேகத்தை எட்டும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

எதிரெதிர் திசையில் இரண்டு "சி.ஆர்., - 450" புல்லட் ரயில்களை சோதனை செய்தபோது, ரயிலின் வேகம் மணிக்கு 896 கிலோ மீற்றராக இருந்தது. என்றாலும் வணிக ரீதியாக 400 கி.மீ., மட்டுமே ரயில் இயக்கப்பட உள்ளது.

பொறியியல் ஆய்வு மற்றும் பாதுகாப்பு அனுமதி இறுதிக் கட்டத்தில் உள்ள நிலையில், சோதனை ஓட்டத்திற்கு பின், "சி.ஆர்., - 450" ரயில் மக்கள் பயன்பாட்டிற்கு வரும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)




# எங்கள் தலைவிதியை நாங்க
# உச்சகட்ட கோபத்தி



(ஜெருசலேம்) ••••••••••••• காஸா அல்லது லெபனான் மீது தாக்குதல் நடத்த இஸ்ரேலுக்கு எவர் ஒப்புதலும் தேவையில்லை என பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அத்துடன், இஸ்ரேல் ஒரு சுதந்திர நாடு.

நாங்கள் எங்கள் சொந்த முடிவுகளால் எங்களைப் பாதுகாத்துக் கொள்வோம் எனவும் மற்றும் எங்கள் தலைவிதியை நாங்களே தொடர்ந்து தீர்மானிப்போம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்காக நாங்கள் யாருடைய ஒப்புதலையும் பெறப்போவதில்லை.

எங்கள் பாதுகாப்பை நாங்கள் கட்டுப்படுத்துகிறோம் எனவும் நெதன்யாகு திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

இருப்பினும், காஸா மீதான இஸ்ரேலின் கொடூரத் தாக்குதல்களுக்கு மட்டுமின்றி இஸ்ரேலின் இதுவரையான அனைத்து இராணுவ நடவடிக்கைகளிலும் அமெரிக்கா தனது முழு ஆதர

## சீனக்கடலில் அடுத்தடுத்து விழுந்த அமெரிக்க விமானம், ஹெலிகொப்டர்

(ஹவாய்)

தென் சீனக்கடல் பகுதியில் அமெரிக்காவின் போர் விமானமும், கடற்படைக்கு சொந்தமான ஹெலிகொப்டரும் அடுத்தடுத்து விபத்துக்குள்ளாகின.

தெற்கு சீனக் கடல் பகுதி மிகவும் சர்ச்சை மிகுந்த பகுதியாகும். இந்தக் கடல் பகுதியை சீனா, வியட்நாம், பிலிப்பைன்ஸ், மலேசியா, புரூனே மற்றும் தைவான் ஆகிய நாடுகள் உரிமை கொண்டாடி வருகின்றன.

இந்த நிலையில், தெற்கு சீனக்கடலில் அமெரிக்காவின் போர் விமானமும், கடற்படைக்கு சொந்தமான

ஹெலிகொப்டரும் அடுத்தடுத்து விபத்துக்குள்ளாகின.

அமெரிக்க ஏவுகணை விமானம் தாங்கிக் கப்பல் யுஎஸ்எஸ் நிமிட்ஸில் இருந்த எம்எச் 60ஆர் சீஹாக் ஹெலிகொப்டர் விபத்துக்குள்ளானது.

அதில், இருந்த 3 விமானிகள் பத்திரமாக வெளியேறினர்.

இதைத் தொடர்ந்து, பிற்பகல் 3.15 மணியளவில், எப்ஏ-18 எப் சூப்பர் ஹார்னெட் போர் விமானமும் விபத்துக்குள்ளானது. இதில், இந்த 2 விமானிகளும் பத்திரமாக வெளியேறி உயிர் பிழைத்தனர்.

இந்த அடுத்தடுத்த விபத்துச் தொடர்பாக நடத்தப்பட் அமெரிக்க தெரிவித்து

அமெரிக் ட்ரம்ப் வி ஜனாதிபதி உள்ள அமெரிக்கா கொப்டரும் அடுத்தடுத் சீனப் பகு துக்குள்ள பல்வேறு யும், சந்தே கிளப்பியுள்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# ாங்களே தீர்மானிப்போம்
# ந்தில் நெதன்யாகு!



வித்துள்
மீதான
க்குதல்
இஸ்ரே
ைனத்து
ளிலும்
ஆதர

வையும் அளித்து வந்துள்ளது.

வளைகுடா நாடான கட்டார் மீதான இஸ்ரேலின் ஏவுகணைத் தாக்குதலை அடுத்து, அமெரிக்கா கண்டனம் எதுவும் தெரிவிக்கவில்லை என்பதுடன் இனி அவ்வாறு நடக்காது என்று மட்டும் அறிவித்தது.

இருப்பினும், கட்டார் மீது ஈரான் நடத்திய தாக்குதலை அமெரிக்கா கடுமையாக கண்டித்தது டன் பதிலடி உறுதி என்றும் எச்சரிக்கை விடுத்தது.

இந்த நிலையிலேயே, இஸ்ரேலின் எதிரிகள் மீது தாக்குதல் நடத்த ஒப்புதல் தேவை இல்லை என அமைச்சர்கள் கூட்டம் ஒன்றில் நெதன்யாகு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## 5 ஆண்டுகளின் பின்
## இந்திய - சீனா விமான சேவை

(பீஜிங்)

மேற்கு வங்கத்தின் கொல்கட்டாவில் இருந்து சீனாவின் குவாங்ஷோ நகருக்கு விமானம் ஒன்று நேற்று முன்தினம் புறப்பட்டதை அடுத்து, ஐந்து ஆண்டுகளாக தடைப்பட்டிருந்த இந்தியா - சீனா இடையிலான விமான சேவை மீண்டும் தொடங்கியது. இந்தியா - சீனாவுக்கு இடையே, கடந்த 2002 முதல் நேரடி விமான போக்குவரத்து சேவையை சீன "ஈஸ்டர்ன் ஏர்லைன்ஸ்" நிறுவனம் அளித்தது.

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக, 2020 இல் இரு நாடுகளுக்கு இடையிலான விமான போக்குவரத்து தற்காலிகமாக நிறுத்தப்பட்டது.

லடாக் எல்லை பிரச்சினையில் நடந்த கல்வான் பள்ளத்தாக்கு மோதலை அடுத்து, அந்த சேவை நிரந்தரமாக நிறுத்தப்பட்டது.


இரு நாட்டு உறவிலும் இருந்த விரிசல் விலகியதை அடுத்து, இம்மாத இறுதியில் இந்தியா - சீனா இடையே விமான சேவை மீண்டும் தொடங்கும் என நம் சிவில் விமான போக்குவரத்து இயக்குநரகம் அறிவித்திருந்தது.

அதன்படி, மேற்கு வங்கத்தின் கொல்கட்டாவில் இருந்து சீனாவின் குவாங்ஷோ நகருக்கு, "இண்டிகோ" விமானம் நேற்றிரவு 10 மணிக்கு புறப்பட்டது. நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் சர்வதேச விமான நிலையத்தில் இருந்து புறப்பட்ட அந்த விமானத்தில் இரு நாட்டு பயணியரும் உற்சாகத்துடன் பயணம் செய்தனர்.

இதைத் தொடர்ந்து, சீனாவின் ஈஸ்டர்ன் ஏர்லைன்ஸ் நிறுவனம், அடுத்த மாதம் 9ஆம் திகதி முதல் அந்நாட்டின் ஷாங்காய் - டில்லி இடையேயான விமானப் போக்குவரத்தை தொடங்கவுள்ளது. இதன் வாயிலாக, இந்தியா - சீனா இடையேயான பொருளாதார மற்றும் வர்த்தக உறவு விரிவடையும் என இரு நாட்டு அதிகாரிகள் தெரிவித்தனர். (நி)

விபத்துச் சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்தப்பட்டுவருவதாக அமெரிக்கக் கடற்படை தெரிவித்துள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் விரைவில் சீன ஜனாதிபதியை சந்திக்க உள்ள நிலையில், அமெரிக்காவின் ஹெலிகொப்டரும், விமானமும் அடுத்தடுத்து தெற்கு சீனப் பகுதியில் விபத்துக்குள்ளாகியிருப்பது பல்வேறு கேள்விகளையும், சந்தேகங்களையும் கிளப்பியுள்ளது. (நி)



## அணுசக்தி ஏவுகணைப் பரிசோதனை அதிர்ச்சியை ஏற்படுத்திய ரஷ்யா!



(மொஸ்கோ)

அணுசக்தி ஏவுகணையான புரெவெஸ்ட்னிக் சோதனை வெற்றிகரமாக நிகழ்த்தப்பட்டதாக ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் அறிவித்துள்ளார்.

ரஷ்யா மற்றும் உக்ரைன் இடையிலான போர் தொடங்கி மூன்று ஆண்டுகளை கடந்து விட்டது.

இந்தப் போரை முடிவுக்குக் கொண்டு வர அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் உட்பட பல்வேறு உலக நாடுகளின் தலைவர்கள் ஏராளமான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இருப்பினும், போர் முடிவுக்கு வராத நிலையில், உக்ரைன் மீது ரஷ்யா தொடர்ந்து தாக்குதலை நடத்தி வருகின்றது.

இந்த சூழலில், அணு

வெஸ்ட்னிக் சோதனை வெற்றிகரமாக நிகழ்த்தப்பட்டதாக புடின் அறிவித்துள்ளார்.


கப்பலில் இருந்து ஏவப்படும் ஏவுகணையான புரெவெஸ்ட்னிக், சுமார் 15 மணிநேரம் தொடர்ச்சியாக பறந்து சென்று 14,000 கிலோ மீற்றர் தூரத்தை கடந்தது.

பாதுகாப்புத்துறை தளபதி மற்றும் இராணுவ கமாண்டர்களுடன் காணொளி காட்சி மூலம் நடத்திய ஆலோசனையின் போது புரெவெஸ்ட்னிக் ஏவுகணையை பாதுகாப்பு படையில் இணைப்பதற்கான உட்கட்டமைப்பை தயார் செய்ய அவர் உத்தரவிட்டார்.

உக்ரைனுக்கு எதிரான போரை ரஷ்யா நிறுத்தாத நிலையில், தற்போது அணுசக்தி ஏவுகணை சோதனை வெற்றியடைந்திருப்பது உலக நாடுகளிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



தென்னிந்திய திருச்சபை யாழ்ப்பாண ஆதீன பிள்ளைகள் விழா நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை திருச்சபை ஆளுகையில் உள்ள உடுவில் மகளிர் கல்லூரி மண்டபத்தில் பேராயர் கலாநிதி வே. பத்மதயாளன் தலைமையில் நடைபெற்றது. **(படம்- சப்தசாங்கரி)**


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1997- இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
கி-பா-43
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: ACCA, Accountant(pvt)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16199

பிறப்பு:1975- இந்து
நட்சத்திரம்:அனுசம்
12இல் சூரி செவ்
உயரம்:5'6"
தகைமை/தொழில்- O/L, Contract (Gov)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16200

பிறப்பு:1988-இந்து
நட்சத்திரம்:அனுசம்
1இல்செவ்
உயரம்:5'6"
தகைமை/தொழில்-A/L, Work(pvt)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15665

பிறப்பு: 1991- இந்து
நட்சத்திரம்:ரேவதி
கி-பா-15 1/2
உயரம்:5'5"
தகைமை/தொழில்-A/L, clerk
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15631

பிறப்பு: 1992- இந்து
நட்சத்திரம்:பூசம்
கி-பா-14 1/2
உயரம்:5'9"
தகைமை/தொழில்: A/L, Supervisor
எதிர்பார்ப்பு:சைவபோசனம்
தொ.இ: B/15640

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு-1991-இந்து
நட்சத்திரம்:திருவோணம்
கி.பா:32
உயரம்:5'4"
தகைமை/தொழில்:BSc,MPhil in Chemistry
எதிர்பார்ப்பு:உயர்பதவி
தொ.இ: G/13552

பிறப்பு-1990-இந்து
நட்சத்திரம்:விசாகம்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: Bsc, Msc, Monitering evalvation Officer
எதிர்பார்ப்பு:பட்டதாரி, அரச தனியார் உத்தியோகம்
தொ.இ: G/10927

பிறப்பு-1995-இந்து
நட்சத்திரம்: கேட்டை
7இல் செவ்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: MBBS, Doctor
எதிர்பார்ப்பு: Doctor, Engineer
தொ.இ: G/15461

பிறப்பு-1991-RC
நட்சத்திரம்-சித்திரை
உயரம்-5'4"
தகைமை/தொழில்: A/L
எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்
தொ.இ: G/15606

பிறப்பு-1995-RC
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: BFA, Teacher
எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்
தொ.இ: G/15604

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# இன்று ஒரு தகவல் (471)

தென்கச்சி கோ.சுவாமிநாதன்



## சிரிப்பு வைத்தியம்!

நல்லா சிரிக்கக் கற்றுக்கொள்ளுங்கள். உங்களுக்கு நோய் வராது!

இது ரொம்ப காலமாக சொல்லிக்கொண்டுவாற ஒரு செய்திதான் இருந்தாலும் இப்போது வைத்தியர்களே அதை ரொம்ப வலியுறுத்தி சொல்ல ஆரம்பித்துவிட்டார்கள்.

சிரிப்பு என்பது நோய் வராமல் தடுப்பது மட்டும் இல்லை நோய்களை குணமாக்கவும் செய்யும்தான்.

அதனாலே தான் இன்றைக்கு நவீன மருத்துவ முறை சிரிப்பை, நோய்களை குணமாக்கும் - நோயை வராமல் தடுக்கும் ஒரு முறையாக அதாவது Therapentic factor ஆக அங்கீகரித்திருக்கிறது.

ஆம்ஸ்டர்டாம் நகரத்திலே "தயான் ஆட்டோரியால்" என்று ஒரு டச்சு டொக்டர். அவர் ஒரு சிரிப்பு மையத்தை ஆரம்பித்து அமோகமாக பயிற்சி அளித்துக் கொண்டு வருகின்றாராம்! அண்மைக்காலத்திலே நிறைய பேர் இந்த சிரிப்பைப் பற்றி ஆராய்ச்சி செய்து கொண்டு வருகிறார்களாம்.

அந்த டொக்டர் தன்னுடைய சிரிப்பு மையத்திலே மூன்று வாரம் சிரிப்பு வைத்தியம் தொடர்ந்து கொடுக்கிறாராம். அதுக்கப்புறம் ஒரு "அகநிலை உணர்வு ஆய்வு" Psychological Test எடுக்கிறாராம். அந்த Test க்கு என்ன பேர் தெரியுமா? Spirlbergers State Trait Anger inventory Test.

பலபேரிடம் பார்த்தார்களாம். இதுமாதிரி ஆய்வு செய்து சிரிப்பு வைத்தியம் செய்த பிறகு அவர்களிலே பலபேருக்குக் கோபத்தின் அளவு ரொம்பவும் குறைந்து போயிருந்ததாம்!

British Journal of the Royal College of General Practitioners அதுவே சிரிப்பின் முக்கியத்துவத்தை உணர்ந்து ஒப்புதல் கொடுத்திருக்கு!

அதனாலே இனிமேல் சிரிப்பும் ஒரு வைத்தியம் தான். அல்லோபதி, ஹோமியோபதி, என்பது மாதிரி இது Humouropathy!

மன அழுத்தம் இருக்கே. இது பலவிதமான நோய்களை உண்டாக்கும்.

அதிகப்படியான இரத்த அழுத்தம், இதய நோய்கள் பெப்டிக் அல்சர், மன உளைச்சல், நரம்பு சம்பந்தமான கோளாறுகள் இப்படி பல நோய்கள்.

சில நேரங்களில் புற்றுநோயை உருவாக்கக்கூடிய அபாயம் உண்டாம்.

இதற்காகத்தான் மன அழுத்தத்தை விரட்ட வாய்விட்டு சிரிக்கச் சொல்கிறார்கள். அமெரிக்கா, இங்கிலாந்து நாடுகளில் நகைச்சுவை மூலமாக நோயைக் குணப்படுத்துவதற்கு சிரிப்பு சிகிச்சை முறையை உருவாக்கியிருக்கிறார்களாம். நம்நாட்டுக்கும் இது வந்து விட்டது.

நகைச்சுவையாளர் சங்கங்கள் நிறைய உண்டாகிவிட்டது.

இன்னும் சில நிபுணர்கள் என்ன சொல்கிறார்கள் தெரியுமா?

சிரிக்கும் போது இரத்த ஓட்டம் அதிகமாகுதாம். செரிமான சக்தி அதிகமாகுதாம்.

இரத்தத்திலே சர்க்கரை சத்து சீக்கிரம் கரையுதாம், குலுங்கி குலுங்கிச் சிரிக்கின்றவர்களுக்கு அதிகமாக குடல் நோய் வருவதில்லையாம். சிரிக்கும் போது நுரையீரல் அதிகப்படியான பிராணவாயு போகுதாம்.

சிரித்து மகிழ்ச்சியாக இருக்கிறது ஜலதோஷத்துக்கும் முகப்பருவிற்கும் சிறந்த மருந்து என்று கூட ஒரு மருத்துவக் குறிப்பு இருக்கு.

அதனாலே எப்பவும் சிரித்துக் கொண்டே இருங்கள். அதுதான் நல்லது.

ஒரு அம்மா அவசரமாக ஒரு டொக்டரிடம் ஓடி வந்தார்.

"டொக்டர்! என் கணவர் உலக சாதனை செய்ய வேண்டும் என்பதற்காக 15 நாட்கள் இடைவிடாமல் சிரித்து பரிசு வாங்கியிருக்கிறார்!" என்றார் ரொம்ப பதட்டமாக.

"அது நல்ல செய்திதானே. அதற்காக ஏன் இப்ப பதட்டமாக அதைச் சொல்கிறீர்கள்?" என்றார் டொக்டர்.

"பரிசு வாங்கி 15 நாட்களாகிவிட்டது டொக்டர்... இன்னமும் சிரிப்பை நிறுத்தவில்லை. அதுதான் சந்தேகமாக இருக்கு!" என்றார் அந்த அம்மா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனவு இல்லம் மெய்ப்பட (பகுதி 05)




**தொழில்முறை மேற்பார்வையின் அவசியம்: - தரமான கட்டிடம், நிதிக் கட்டுப்பாடு மற்றும் காலத்திற்குள் நிறைவு பெறும் வீடுகள்**

1.0 அறிமுகம்:

ஒரு வீட்டை கட்டுவது என்பது ஒரு மனிதனின் வாழ்நாளில் மிகப் பெரிய கனவுகளில் ஒன்று. ஆனால் அந்தக் கனவு பல நேரங்களில் துயரமாக மாறுகிறது. காரணம் ஒன்றுதான் - தொழில்முறை நிபுணர்களை சேர்க்காமல் உறவினர்கள், நண்பர்கள், "அறிமுகமானவர்கள்" அல்லது "பரிந்துரைக்கப்பட்டவர்கள்" மூலமாக வீடுகள் கட்டுவது. ஆரம்பத்தில் அது மலிவாகவும், எளிதாகவும், தெரிந்தாலும் பின்னர் வேலை பாதியில் நின்று விடுகிறது தரம் குறைகிறது. செலவு அதிகரிக்கிறது மற்றும் வீட்டை முடிக்க முடியாமல் போகிறது.

பெரும்பாலும் இவர்களுக்கு எந்தப் பொது அனுமதியும், தொழில்நுட்ப தகுதியும், நிதி மேலாண்மை அறிவும் இல்லை. வாடிக்கையாளர்கள் பெரும்பாலும் பணத்தை முழுமையாக முன்பணமாக வழங்கிவிட்டு நம்பிக்கையுடன் இருக்கிறார்கள்.

ஆனால் அந்தப் பணம் பல நேரங்களில் வேறு வேலைகளுக்கு அல்லது தனிப்பட்ட தேவைகளுக்கு மாற்றப்படுகிறது. இதனால் வேலை நின்றுவிடுகிறது. பணம் போய் வீடு முடியாமல் போகிறது.

இந்தப் பிரச்சினைகளின் அடிப்படை காரணம் - தொழில்முறை மேற்பார்வையும், பணப்பரிசோதனையும் இல்லாதது. ஒரு இன்ஜினியர் கட்டிடக் கலைஞர் அல்லது கணிய அளவியலாளர் போன்ற நிபுணர்கள் இல்லாதபோது யாரும் தரத்தையும் முன்னேற்றத்தையும் பரிசோதிக்கவில்லை. இதன் விளைவாக பணம் தவறாக பயன்படுத்தப்படுகிறது கட்டுமானம் தாமதமாகிறது மற்றும் வாடிக்கையாளர் பெரும் இழப்பை சந்திக்கிறார்.

2.0 தொழில்முறை இல்லாத கட்டுமானத்தின் விளைவுகள்

2.1 நிதி தவறான பயன்பாடு

அதிகபட்ச வீட்டு கட்டுமானங்கள் முன்பணம் அடிப்படையில் தொடங்கப்படுகின்றன. தொழில்முறை நபர் இல்லாததால் அந்த பணம் எவ்வளவு அளவு வேலைக்குப் பயன்படுத்தப்பட்டது என்பதை யாரும் சரிபார்க்கவில்லை. பல நேரங்களில் ஒப்பந்தக்காரர் அந்தப் பணத்தை வேறு இடங்களில் பயன்படுத்தி பணம் இல்லாமல் வேலையை நிறுத்தி விடுகிறார்.

2.2 தரம் குறைவு மற்றும் கட்டுமானப் பிழைகள்

ஒரு இன்ஜினியர் இல்லாதபோது சிமெண்ட் கலவை இரும்புக் கட்டமைப்பு தளஅடித்தளம் மற்றும் நீர்ப்பாசன அமைப்புகள் தவறாக செய்யப்படும். இது பின்னர் பெரிய சேதங்களுக்கு வழிவகுக்கும். சுவர்கள் பிளக்கும் தளங்கள் உடையும் நீர் ஊறும் - இவை அனைத்தும் மேற்பார்வை இல்லாமையின் விளைவு.

2.3 கணக்கீடு இல்லாமை

ஒரு தொழில்முறை அளவையர் அல்லது மேற்பார்வையாளர் இல்லாதபோது "எவ்வளவு வேலை முடிந்தது" என்ற துல்லியமான கணக்கீடு கிடையாது. இதனால் வாடிக்கையாளர் அளவுக்கு மீறி பணம் செலுத்துகிறார் அல்லது ஒப்பந்தக்காரர் குறைந்த பணத்தில் அதிகமாகக் கோருகிறார்.

2.4 வேலை தாமதம் மற்றும் திட்டமிடல் இல்லாமை

பணிகள் தாமதமாகி விடுவது மற்றொரு பொதுவான பிரச்சினை. தொழில்முறை மேலாண்மை இல்லாமல் வேலைகள் சரியான வரிசையில் நடைபெறாது. பொருட்கள் சரியான நேரத்தில் வராது. இதனால் சிறிய திட்டங்கள் கூட மாதங்களாக நீள்கின்றன.

2.5 சட்ட மற்றும் பாதுகாப்பு பிரச்சினைகள்

பல வீடுகள் அனுமதி பெறாமல் கட்டப்படுகிறது. பின்னர் அந்த வீடுகளுக்கு மின்சாரம் நீர் அல்லது வங்கி கடன் போன்றவற்றை பெற முடியாமல் போகிறது. மேலும் பாதுகாப்பு விதிமுறைகள் பின்பற்றப்படாததால் விபத்துகள் ஏற்படலாம்.

3.0 தொழில்முறை நிபுணரின் பங்கு

ஒரு இன்ஜினியர் அல்லது கட்டிட நிபுணர் வெறும் வரைபடம்வரை உருவாக்குவதற்காக மட்டுமல்ல. அவர் திட்டத்தின் தரக்காவலர்.

3.1 தரம் மற்றும் விதிமுறைகள்

நிபுணர் பொருட்களின் தரத்தைச் சோதிக்கிறார் வரைபடத்திற்கேற்ப வேலை நடந்ததா என்று பார்க்கிறார். சிமெண்ட் கலவை, கான்கிரீட் வலிமை நீர்சார் அமைப்புகள் போன்றவை சரியாக உள்ளதா என்று உறுதி செய்கிறார். இதனால் தரம் உறுதிப்படுகிறது.

3.2 பணப்பரிசோதனை மற்றும் சான்றிதழ்

தொழில்முறை மேற்பார்வையின் முக்கிய பங்கு பணப்பரிசோதனையே. எவ்வளவு வேலை முடிந்தது என்பதை அளந்து, அதன் அடிப்படையில் மட்டுமே பணம் விடுவிக்கப்பட வேண்டும். இதை ஒரு இன்ஜினியர் அல்லது கணிய அளவியலாளர் சரிபார்த்தால்தான் நிதி தவறான பயன்பாடு தவிர்க்கப்படும்.

3.3 முன்னேற்ற அறிக்கைகள்

ஒரு நிபுணர் தினசரி அல்லது வாராந்திர அடிப்படையில் வேலை முன்னேற்றத்தை பதிவு செய்கிறார். இதனால் தாமதம் ஏற்படுமா, பொருள் பற்றாக்குறை உண்டா, அல்லது தரம் குறைகிறதா என்பதை உடனே கண்டறிய முடியும்.

3.4 ஒப்பந்த நிர்வாகம்

ஒரு நிபுணர் வாடிக்கையாளர் மற்றும் ஒப்பந்தக்காரர் இடையே நடுநிலை மனிதராக செயற்படுகிறார். மாற்றங்கள் விலை வேறுபாடுகள் அல்லது தகராறுகள் ஏற்பட்டால் அவர் நியாயமான தீர்வை பரிந்துரைக்கிறார்.

3.5 பாதுகாப்பு மற்றும் சுற்றுச் சூழல்

நிபுணர் பணியிட பாதுகாப்பை உறுதி செய்கிறார் - உயரத்தில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கான பாதுகாப்பு. கழிவுப்பொருள் மேலாண்மை, தூசி கட்டுப்பாடு போன்றவை அனைத்தும் அவரது பொறுப்பு.

4.0 தொழில்முறை பங்களிப்பின் நன்மைகள்

தொழில்முறை பங்களிப்பு வழங்கும் நன்மைகள் கணிசமானவை:

- தரமான வேலை - கட்டுமானம் தரநிலைகளை பின்பற்றுகிறது.
- காலத்திற்குள் நிறைவு - திட்டமிட்ட கண்காணிப்பு காரணமாக தாமதம் குறையும்.
- செலவு கட்டுப்பாடு - பணம் உண்மையில் முடிந்த வேலைக்கு மட்டுமே செலுத்தப்படும்.
- தகராறுகள் குறையும் - ஆவணங்கள் மற்றும் சான்றுகள் தெளிவாக இருப்பதால் பிரச்சினைகள் குறையும்.
- பாதுகாப்பு மற்றும் சட்ட பின்பற்றல் - தொழில்முறை மேற்பார்வை பாதுகாப்பை உறுதி செய்கிறது.
- நீண்டகால மதிப்பு - தரமான வீடுகள் நீண்ட காலம் நிலைத்து சொத்து மதிப்பு உயர்கிறது.

5.0 முடிவுரை

தொழில்முறை மேற்பார்வையின் அவசியம் உணர்ந்து அதனை சரிவர உள்வாங்கி வீட்டுகட்டுமானங்களை மேற்கொண்டால் சொந்த வீடுகட்டிட விரும்புபவரை பாதுகாப்பாக வைத்திருக்கும், திட்டத்தை நேரத்தில் முடிக்க உதவும் மற்றும் சமூகத்தில் தரமான கட்டுமான பண்பாட்டை உருவாக்கும்.

**இலங்கை பொறியியலாளர்கள் சங்கம்,**
**வடக்கின் அத்தியாயம்.**

# இராசிபலன்

28.10.2025
ஐப்பசி 11, செவ்வாய்க்கிழமை
சப்தமி பின்னிரவு 5.22 மணி

பூராடம் பிற்பகல் 1.01
சுப நேரம் 10.33-12.03 மணிவரை
இராகுகாலம் 3.03-4.33 மணிவரை

சந்திராஷ்டமம்-
மிருகசீரிடம், திருவாதிரை.

வளவன்




பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, ஆரோக்கியத்தில் ஏற்பட்ட அச்சுறுத்தல்கள் அகலும், நண்பர்களைச் சந்தித்து நலம்காணும் நாள்.




வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், உறவினர் வருகையால் உற்சாகம் கூடும், மருத்துவச் செலவுகள் குறையும், பொது வாழ்வில் கௌரவம் கூடும்.




புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.




உறவினர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழும் நாள், பயணங்களால் பலனுண்டு, சுப விரயங்கள் கூடும் நாள், திட்டமிட்ட காரியங்களில் திருப்பங்கள் ஏற்படலாம்.




கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், குடும்பப் பொறுப்புக்கள் கூடும், பிரயாண பயமுண்டு, உடல்நலனில் கவனம் தேவை.




அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வாழ்க்கைத் தரம் உயர வழிவகை செய்வீர்கள்.




சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும், பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், உற்சாகமான நாள்.




பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.




நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு, வருமானம் திருப்தி தரும்.




சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, பெற்றோர் மீது பிரியம் கூடும், கொள்கைப்பிடிப்போடு செயற்படுவீர்கள், பயணங்களால் பலனுண்டு.




கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், வழிபாட்டால் இன்பம் காணவேண்டிய நாள், எதிர்பாராத காரியமொன்று நடைபெறும் வாய்ப்புண்டு.




புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், வங்கிச் சேமிப்பை அதிகரிக்கும் எண்ணம் உருவாகும், செய்தொழிலில் முன்னேற்றம் காணும் நாள்.

**பணம் பல நன்மைகளுக்கு உபயோகப்படுவது போல் பல தீமைகளுக்கு காரணம் ஆகிறது.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 395





என்று தெரிவித்துவிட்டு, காலாந்தக கண்டர் சக்கரவர்த்தியிடம் விடைபெற்றுச் சென்றார்.

அநிருத்தர் வரும் சமயத்தில் அங்கே இருக்கச் சின்னப் பழுவேட்டரையர் விரும்பவில்லை. தாறுமாறாகச் சம்பந்தமில்லாத கேள்வி ஏதேனும் தம்மை முதன் மந்திரி கேட்டு திணறச் செய்யக்கூடும் என்ற அச்சம் அவர் மனதிற்குள்ளே இருந்தது. முக்கியமாக சக்கரவர்த்தியிடம் புயலினால் அவதிக்குள்ளான ஜனங்களுக்கு உதவுவதற்காகப் பொக்கிஷ சாலையைத் திறந்து விடும்படி அநிருத்தர் தம் முன்னாலேயே உத்தரவு வாங்கி விட்டால் பெரிய தொல்லையாகப் போய்விடும். நாளைக்குத் தமையனாரின் முன்னால் எப்படி முகத்தைக் காட்டுவது?

அநிருத்தருடைய வரவை அன்று காலையிலிருந்தே சக்கரவர்த்தி எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். ஆனால் சூரியன் அஸ்தமிக்கும் சமயத்தில் தான் முதன்மந்திரி வந்தார். அவருடைய திட நெஞ்சமும் இப்போது சிறிது கலங்கிப் போயிருந்தது. அவர் எவ்வளவோ ஜாக்கிரதையுடன் போட்டிருந்த திட்டம் தவறிப் போய்விட்டது. மந்தாகினியைப் பற்றி ஏதேனும் செய்தி கிடைக்கும். பின்னர் சக்கரவர்த்தியைப் போய்ப் பார்க்கலாம் என்று அவர் அரண்மனைக்குப் போவதைத் தள்ளிப் போட்டுக் கொண்டிருந்தார். பிற்பகலில் ஆழ்வார்க்கடியான் வந்து பெரிதும் தர்ம சங்கடமான செய்தியைத் தெரியப்படுத்தினான். ஊமை ராணி போயிருக்கக் கூடும் என்று தான் ஊகித்த குறுகிய சந்து வழியில் சென்றதாகவும், ஒரு ஸ்திரீ பழுவேட்டரையர் அரண்மனைத் தோட்டத்து மதில்சுவர் ஏறிக் குதித்தது போல் தோன்றியதென்றும், அவள் ஊமை ராணியாக இருக்கக்கூடும் என்று எண்ணி அவனும் அந்த மதில் சுவரில் ஏறிக் குதித்ததாகவும் தோட்டத்தில் தேட ஆரம்பிப்பதற்குள்ளே சின்னப் பழுவேட்டரையரின் ஆட்கள் வந்து பிடித்துக் கொண்டதாகவும் கூறினான்.

"அவர்களிடம் உண்மைக் காரணத்தைச் சொல்ல முடியவில்லை. ஐயா அதனாலே தான் தங்களுடைய பெயரைக் கூறி விடுதலை பெற்று வரவேண்டியதாயிற்று!" என்றான்.

இந்த விவரம் முதன்மந்திரிக்குப் பெரும் கவலையை உண்டாக்கிற்று. "இந்தத் தஞ்சாவூர்க் கோட்டையில் இவ்வளவு அரண்மனைகள் இருக்கிறபோது, பெரிய பழுவேட்டரையரின் மாளிகையிலேதானா அவள் பிரவேசிக்க வேண்டும்? பகிரங்கமாக ஆள்விட்டுத் தேடச் சொல்லக்கூட முடியாதே? ஆனாலும் பார்க்கலாம். பெரிய பழுவேட்டரையர் ஊரில் இல்லாதது ஒரு விதத்தில் நல்லதாய்ப் போயிற்று. அரண்மனையைச் சுற்றிலும் காவல் போட்டு வைக்கலாம். அவ்வரண்மனைக்கு உள்ளேயும் எனக்கு ஒரு ஆள் இருக்கிறான் அவனுக்கும் சொல்லி அனுப்புகிறேன்! இருந்தாலும், இந்த ஓடக்காரப் பெண் எவ்வளவு தர்ம சங்கடத்தை உண்டாக்கி விட்டாள்?" என்றார் முதன் மந்திரி.


"சுவாமி! ஓடக்காரப் பெண் குறுக்கிட்டிராவிட்டாலும் ஊமைராணி தங்கள் விருப்பத்தின்படி நடந்திருப்பாள் என்பது நிச்சயமில்லை.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## புத்திபலம்



புத்தூர் என்ற ஊரில் இளங்கோ என்ற இளைஞன் ஒருவன் இருந்தான். அவன் உடல் வலிமையே இல்லாதவன். ஆள் பார்ப்பதற்கு சுமாரான உடல் கட்டு கொண்டவனாக இருந்தாலும், அவனால் கடினமான வேலைகள் எதையும் செய்ய முடியாது. ஆனால், பிறரது பலத்தை தனக்குப் பயன்படுத்தி காரியம் சாதித்துக் கொள்வதில் அவனை மிஞ்ச யாராலும் முடியாது.

இளங்கோவுக்கு மூன்று நண்பர்கள் இருந்தனர். அவர்களும் இளங்கோவை போல் உடல் வலிமையற்றவர்கள் என்று நினைத்து விடக்கூடாது. அவர்கள் மிகவும் பலசாலிகள்.

"தினமும் உடற்பயிற்சி செய்து உடலை பலப்படுத்தி என்ன பிரயோஜனம்? மூளையை பலப்படுத்துங்கள். அது தான் வாழ்க்கைக்கு உதவும்!" என்று சொல்லிச் சிரிப்பான்.

அதற்கு அந்த மூவரும், இளங்கோ! உடலை பலப்படுத்தினால் போதும், மூளை தானே பலப்பட்டு விடும். மூளை வலிமையை விட உடல் வலிமையால் உலகத்தில் நிறைய சாதிக்க முடியும். ஹூம். நோஞ்சான் பயலான உனக்கு உடலைப் பற்றி என்ன தெரியும்!" என்று சொல்லி சிரிப்பர்.

இப்படியாக அவர்கள் நல்ல நண்பர்களாகவே இருந்து கொண்டிருந்தனர். ஒரு நாள் இளங்கோ தனது மளிகைக் கடைக்குத் தேவையான சாமான்களை சந்தைக்குச் சென்று வாங்கி மூட்டை மூட்டையாகக் கட்டி சிறு வண்டியில் வைத்து மிகவும் சிரமத்துடன் இழுத்து வந்து கொண்டிருந்தான்.

வழியில் ஒரு பெரிய மேடு குறுக்கிட்டது. அவன் உடலில் பலம் இல்லாததால் அந்த மேட்டின் மேல் சரக்கு வண்டியை இழுக்க முடியாமல் மிகவும் திணறினான். யாராவது ஒருவர் உதவிக்கு வந்தால் வண்டியை எளிதாக மேட்டின் மேல் ஏற்றி விடலாம் என்று நினைத்த அவன், வண்டியை நிறுத்தி விட்டு யாராவது வருகிறார்களா என்று மேட்டின் மீது ஏறி நின்று பார்த்தான்.

அப்பொழுது எதிர் திசையில் இருந்து அவனது மூன்று பலசாலி நண்பர்கள் வந்து கொண்டிருந்தனர். அவர்களைப் பார்த்த இளங்கோவுக்கு ஒரு யோசனை தோன்றியது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது எண்ணம், சொல் செயல் மூன்றும் சமமாய் இருக்கும் போதே நமது நேர்மையை மற்றவர் உணர்வர்.

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தமிழ் அரசியல் தரப்புகள் ஒற்றுமைப்பட முடியுமா?

தமிழ் அரசியல் தரப்புகள் ஒற்றுமைப்படாவிட்டால், ஆளும் தேசிய மக்கள் சக்தி தமிழர் பகுதிகளில் காலூன்றும் என முன்னாள் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கூறியுள்ளார்.

வடக்கு மாகாணத்தின் முதலமைச்சராகவும் பின்னாளில் பாராளுமன்ற உறுப்பினராகவும் இருந்த சி.வி.விக்னேஸ்வரன் அவர்களுக்குத் தமிழ் அரசியல் தரப்புகள் ஒற்றுமைப்படமாட்டாதென்பது நன்கு தெரியும்.

தவிர, வடக்கு மாகாண சபையின் முதலாவது முதலமைச்சர் என்ற பெருமையைத் தனதாக்கிய நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன்; வடக்கு மாகாண சபையைத் திறம்பட இயக்கவில்லை. கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தத் தவறிவிட்டார் என்ற கடும் குற்றச்சாட்டுக்கு ஆளாகியிருந்தார்.

தவிர, பின்னாளில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்குகின்ற ஒரு பாராளுமன்ற உறுப்பினராக அவர் தன்னை இனங்காட்டிக் கொண்டார்.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகப் பதவியேற்றபோது, நாட்டின் பொருளாதார மந்தத்துக்குத் தீர்வு காணக்கூடிய இயலுமை ரணில் விக்கிரமசிங்கவிடம் மட்டுமே உண்டு எனக் கூறிய சி.வி.விக்னேஸ்வரன், நாட்டில் பொருளாதார மீட்சி ஏற்படும்வரை தேர்தல்களைப் பிற்போட வேண்டும் என்ற கருத்தை முன்வைத்து ரணில் விக்கிரமசிங்கவின் பாட்டுக்குப் பக்கவாத்தியம் இசைத்தார்.

பரவாயில்லை. இவை பொதுவெளியில் தாம் தாம் சார்ந்த அரசியல் சிந்தனை என்பதோடு அதை அப்படியே விட்டுவிடலாம்.

ஆனால், ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் அரசியல் பலத்தைக் கணிப்புச் செய்ய முடியாத நீதியரசர் விக்னேஸ்வரன், தானாக வலிந்து அநுர குமார திஸாநாயக்கவுக்கு நாட்டை ஆளுகின்ற ஆளுமை போதாது என்ற சாரப்படக் கருத்துரைத்தார். எனினும் அதுபற்றி அநுர தரப்பு பொருட்படுத்தவில்லை.

இந்நிலையில், யாழ்ப்பாணத்துக்கு அநுர குமார திஸாநாயக்க வருகை தந்த போது, நீதியரசர் விக்னேஸ்வரன் கூறியதைச் செய்தியாளர்கள் சுட்டிக்காட்டி கேட்டபோது; வடக்கு மாகாணத்தின் முதலமைச்சராக இருந்த அவர் எவ்வாறு நிர்வாகம் செய்தார் - அவரின் ஆளுமை எப்படி என்பது எமக்கு நன்கு தெரியும் எனச் சுருக்கமாகப் பதில் அளித்ததோடு தனது கருத்தை முடித்துக் கொண்டார்.

உண்மை. ஜனாதிபதித் தேர்தலில் அநுர குமார திஸாநாயக்க அமோக வெற்றியீட்டிய போது, முதலில் அடங்கிப்போன தமிழ் அரசியல்வாதியாக சி.வி.விக்னேஸ்வரன் அவர்களே அடையாளப்படுத்தப்பட்டார்.

ஆம், அநுரவின் அரசியல் பலத்தை கிஞ்சித்தும் அறியாமல், திருவாய் மலர்ந்து தன் முகவரியை வலுவிழக்கச் செய்த முன்னாள் வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் அவர்கள் இப்போது கூறுவது; அநுரவை எதிர்ப்பதற்காக - தமிழர் பகுதியில் அவரது செல்வாக்கைத் தடுப்பதற்காக தமிழ்த் தரப்புகள் ஒன்றுபடவேண்டும் என்பதே.

## வேலணைப் பிரதேச சபையின் ஆளுகைக்குள்

# கட்டட நிர்மாணத்துக்கு அனுமதி அவசியம் தவறினால் பாரபட்சமின்றி நடவடிக்கை

### தவிசாளர் சிவலிங்கம் அசோக்குமார்

(யாழ்ப்பாணம்)

வேலணைப் பிரதேச சபையின் ஆளுகைக்குள் எந்தவொரு தரப்பினரும் கட்டடங்களை நிர்மாணிக்கும் போது பிரதேச சபையின் சட்ட விதிமுறைகளுக்கு ஏற்ப அனுமதிபெற்று கட்டடங்களை நிர்மாணிக்க வேண்டும் தவறினால் பாரபட்சமின்றி சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தவிசாளர் சிவலிங்கம் அசோக்குமார் அறிவுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அண்மைக்காலமாக பிரதேச சபையின் ஆளுகைக்குள் பல்வேறு கட்டுமானங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதை அவதானிக்க முடிகின்றது.

இதில் பல முறையான அனுமதி பெற்று நிர்மாண வேலைகளை முன்னெடுக்கவில்லை எனத் தகவல்களூடாக உறுதிசெய்ய முடிகின்றது.

இவ்வாறு முறையான அனுமதி பெறாது நிர்மாணிக்கப்படும் கட்டுமானங்கள் சட்டமுறையற்ற கட்டுமானங்கள் என்றே கருத்தில் கொள்ளப்படும்.

அத்துடன் அவ்வாறு அடையாளப்படுத்தப்படும் கட்டுமானங்கள் மீது சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப் பிரதேச சபை நிர்ப்பந்திக்கப்படும் நிலையும் உருவாகும்.

எனவே 1987 ஆம் ஆண்டு 15 இலக்க பிரதேச சபைகள் சட்டம் மற்றும் 1978 ஆம் ஆண்டு 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபையின் சட்டம் ஆகியவற்றின் அடிப்படையில்,

01. பிரதேச சபையில் கட்டட அனுமதிக்கான விண்ணப்பத்தைப் பெற்றுக்கொள்ளல்.

02. அமைவுச் சான்றிதழ் அல்லது கால நீடிப்பு அனுமதியைப் பெறுதல்.

03. காணி உபபிரிவிடல் மற்றும் காணி ஒருங்கிணைத்தல் அனுமதியினைப் பெற்றுக்கொள்ளல்.

04. நிலுவையிலுள்ள அனைத்து விண்ணப்பங்களுக்குமான அனைத்து ஆவணங்களையும் சமைர்ப்பித்தல் போன்ற நடைமுறையைப் பின்பற்றிக் கட்டடங்களுக்கான நிர்மாண அனுமதியைப் பெற்றுக்கொள்வது அவசியமாகும்.

இதே நேரம் அனுமதியின்றி அமைக்கப்படும் கட்டுமானங்களால் அண்மைக்காலத்தில் பல்வேறு பிரச்சினைகள் தோன்றிப் பல முரண்பாடுகளை உருவாக்கி வருவதால் இந்த நடைமுறையை வேலணைப் பிரதேச ஆளுகைக்குள் கட்டுமானங்களை மேற்கொள்வோர் பின்பற்றுவது அவசியமாகும் என்பதுடன் அவ்வாறு பின்பற்றத் தவறும் பட்சத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கப் பிரதேச சபை நிர்ப்பந்திக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

(ம-7,104)

# பொலிஸ்மா அதிபருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பேன்

### பாராளுமன்ற உறுப்பினர் ஜகத் விதான

(கொழும்பு)

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் குழுக்களுடன் தனக்குத் தொடர்பு இருப்பதாகக்கூறிய பொலிஸ்மா அதிபர் சி.டி.பிரியந்த வீரசூரியவுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப் போவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜகத் விதான தெரிவித்துள்ளார்.

தமக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல் அரசியல் உள்நோக்கம் கொண்டது அல்ல, மாறாக சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளவர்களுடனான இவரது தொடர்பு காரணமாக ஏற்பட்டது என்று பொலிஸ்மா அதிபர் சி.டி.பிரியந்த வீரசூரிய அண்மையில் ஊடகங்களிடம் தெரிவித்திருந்தார்.

இந்தக் கூற்று ஆதாரமற்றது மற்றும் தமது நற்பெயருக்குக் களங்கம் விளைவிக்கும் நோக்கம் கொண்டது எனப் பாராளுமன்ற உறுப்பினர் ஜகத் விதான மறுத்துள்ளார்.

எனக்கு ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் குழுவுடன் எந்தத் தொடர்பும் இல்லை. நான் 1989 ஆம் ஆண்டு முதல் சட்டபூர்வமாக வியாபாரத்தில் ஈடுபட்டு வருகிறேன். எந்தவொரு சட்டவிரோத நடவடிக்கையிலும் நான் ஒருபோதும் ஈடுபட்டதில்லை என்று தெரிவித்தார்.

இந்த வார ஆரம்பத்தில் பாராளுமன்றத்தில் அச்சுறுத்தல் குறித்து தாம் கவலை தெரிவித்ததன் பின்னர், சபாநாயகரின் தலையீட்டின் மூலம் தனக்குப் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டதில் பொலிஸ்மா அதிபர் கோபமடைந்துள்ளார் என்றும் அவர் குற்றம் சாட்டினார். (ம-7)

# இராணுவப் பேருந்து மோதி பொலிஸ் சார்ஜன்ட் உயிரிழப்பு

மொனராகல மாவட்டம் வெல்லவாய - தனமல்விலப் பிரதான வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த விபத்தானது நேற்று முன்தினம் (26) இடம்பெற்றுள்ளது.

வெல்லவாய நோக்கிச் சென்ற இராணுவப் பேருந்து எதிர்த்திசையில் இருந்து வந்த மோட்டார் சைக்கிள் மீது நேருக்கு நேர் மோதியதால் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த 36 வயதுடைய வெல்லவாயவைச் சேர்ந்த பொலிஸ் சார்ஜன்ட் உயிரிழந்தார்.

உயிரிழந்தவரின் சடலம் பிரேதப் பரிசோதனைக்காக வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

விபத்துத் தொடர்பில் வெல்லவாய பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## கடந்த 3 வாரங்களில்

# 120,000 சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகை

(கொழும்பு)

ஒக்ரோபர் மாதத்தின் கடந்த 03 வாரங்களில் மட்டும் சுமார் 120,000 சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகை தந்துள்ளதாகச் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

ஒக்ரோபர் 23 ஆம் திகதி நிலைவரப்படி 119,670 சுற்றுலாப் பயணிகள்நாட்டிற்கு வருகை தந்துள்ளனர்.

அதன்படி இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதி வரையில் 1,845,164 சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வந்துள்ளனர்.

இதற்கிடையில் நாட்டிற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ள போதிலும் சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான வசதிகளை வழங்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை என்று அகில இலங்கை சிறு மற்றும் நடுத்தர சுற்றுலா தொழில்முனைவோர் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

சுற்றுலாத் துறையில் வசதிகளை மேம்படுத்த ஒரு முறையான திட்டத்தைத் துரிதமாகத் தயாரிக்க வேண்டும் என்று அதன் தலைவர் சமீர சேனக டி சில்வா வலியுறுத்தியுள்ளார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும்

## ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் நாட்டின் வளர்ச்சி

### பகுதி VI

31

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம். தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

இலங்கையின் முதலாவது அரசியற் கட்சியான லங்கா சமசமாஜக்கட்சி (LSSP) 1935இல் தோற்றம் பெற்றது. இதனைத் தொடர்ந்தே டொனமூர் அரசியல் யாப்புக் காலத்தில் (1931-1947) இலங்கை இந்திய காங்கிரஸ் (1939), இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (1943), அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சி (1944), பொலசெவிக் லெனினிஸ்ட் கட்சி (1945), ஐக்கிய தேசிய கட்சி (1946), சுயராட்சியக் கட்சி (1947) என்பன தோற்றம் பெற்றன. பாராளுமன்ற அரசாங்கம் நடைமுறையில் இல்லாத போதும் சர்வசன வாக்குரிமையின் அறிமுகம் கட்சிகளின் தோற்றத்தினை ஊக்குவித்திருந்தது.

இலங்கையின் பிரதான இயக்கமாக விளங்கிய இலங்கை தேசிய காங்கிரஸ், எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்காவினால் உருவாக்கப்பட்ட சிங்கள மகா சபை, முஸ்லீம் மக்களின் நலன்களைப் பேணுவதற்காக உருவாக்கப்பட்ட முஸ்லீம் லீக் ஆகிய மூன்று அமைப்புக்களும் மற்றும் சில தமிழ்க் குழுக்கள் ஒன்றிணைந்தே ஐக்கிய தேசிய கட்சியை உருவாக்கின.

**அபேட்சகர்களின் சின்னங்கள்:**

1931 ஆம் ஆண்டு மற்றும் 1936 ஆம் ஆண்டுத் தேர்தல்களில் அபேட்சகர்களை அடையாளப்படுத்துவதற்கு வாக்குப்பெட்டிகள் வெவ்வேறு நிறங்களில் வைக்கப்பட்டன. 1947ஆம் ஆண்டுத் தேர்தலில் நிற வாக்குப்பெட்டிகள் அகற்றப்பட்டு அதற்குப் பதிலாக அபேட்சகர்களை அடையாளப்படுத்துவதற்கு சின்னங்கள் வழங்கப்பட்டன. 1947 ஆம் ஆண்டுத் தேர்தலில் 24 சின்னங்களில் ஒன்றை அபேட்சகர் தெரிவு செய்து பாவிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

இச் சின்னங்கள் அபேட்சகர்களுக்கே ஒழிய கட்சிகளுக்கல்ல. கட்சிகளுக்கு சின்னங்கள் ஒதுக்கும் முறை 1960 ஜூலையில் நடைபெற்ற தேர்தலுடன் ஆரம்பமாகியது. இதனால் ஒரே கட்சியைச் சேர்ந்த அபேட்சகர்கள் வெவ்வேறு தொகுதிகளில் போட்டியிடும்போது வெவ்வேறு சின்னங்களின் கீழ் போட்டியிடவேண்டியதாயிற்று.

உதாரணமாக அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஜீ.ஜீ. பொன்னம்பலம் யாழ்ப்பாணத் தொகுதியில் சைக்கிள் சின்னத்திலும் அதே கட்சியைச் சேர்ந்த எஸ்.ஜே. வி. செல்வநாயகம் காங்கேசன்துறைத் தொகுதியில் திறப்புச் சின்னத்திலும் அதே கட்சியைச் சேர்ந்த சி. வன்னியசிங்கம் கோப்பாய் தொகுதியில் யானைச் சின்னத்திலும் போட்டியிட்டனர்.

**செனட்சபை**

சோல்பரி அரசியலமைப்பு இலங்கைப் பாராளுமன்றம் கீழ்ச்சபை, மேற்சபை யென இருசபைகளைக் கொண்டிருக்குமென விதித்தது. கீழ்ச்சபை பிரதிநிதிகள் சபையென அழைக்கப்பட்டது. அதன் உறுப்பினர் "பாராளுமன்ற உறுப்பினர்" என அழைக்கப்பட்டனர். பிரதிநிதிகள் சபைதான் உண்மையான அரசியலதிகாரம் படைத்த சபையாக விளங்கியது. நிதி விடயங்கள் உட்படச் சகல சட்டங்களையும் இச் சபைதான் விவாதித்துத் தீர்மானித்தது.

கீழ்ச்சபை அவசரப்பட்டு நிறைவேற்றும் சட்டங்களை புனராலோசனைசெய்து ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் ஆலோசனை வழங்குவதே மேற்சபையின் கடமையாக விருந்தது. மேற்சபையில் (செனட்சபை) 30 உறுப்பினர்கள் இருந்தார்கள். அவர்கள் செனட்டர்களென அழைக்கப்பட்டனர். 15 செனட்டர்களை மகாதேசாதிபதி பிரதம மந்திரியின் ஆலோசனையின்படி நியமனம் செய்வார். மீதி 15 செனட்டர்களும் பிரதிநிதிகள் சபையினால் "விகிதாசாரப் பிரதிநிதித்துவம்" என்ற முறையில் தெரிவு செய்யப்பட்டனர்.

1947 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட செனட்சபையில் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையில் இடது சாரிகள் சார்பாக சோமசுந்தரம் நடேசன், தமிழ்க் காங்கிரஸ் சார்பாக டாக்டர் இ.எம்.வி. நாகநாதன் மற்றும் இலங்கை இந்திய காங்கிரஸ் சார்பாக பெரி சுந்தரம் ஆகிய தமிழர்கள் செனட்டர்களாக தெரிவுசெய்யப்பட்டனர். நியமன முறையில் யாழ். இந்துவில் படித்த செ.குமாரசாமி , சேர். சிற்றம்பலம். ஏ. காடினர், ஏ.பி. இராஜேந்திர முதலியார் ஆகிய தமிழர்கள் செனட்டர்களாக இருந்தனர். 1949ஆம் ஆண்டில் எஸ். ஆர். கனகநாயகம் செனட்டராக தெரிவுசெய்யப்பட்டார்.

1952 ஆம் ஆண்டு மார்ச் 22ஆம் திகதி பிரதமர் திரு. டீ. எஸ்.சேனநாயக்க குதிரையிலிருந்து விழுந்து மரணமடைந்ததையடுத்து அவரின் மகன் டட்லி சேனநாயக்க இலங்கையின் இரண்டாவது பிரதம மந்திரியாக பதவியேற்றுக்கொண்டார். டட்லி சேனநாயக்க பதவியேற்று சரியாக 17 நாட்களின் பின் அதாவது 1952ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 8 ஆம் திகதி சுதந்திர இலங்கையின் முதலாவது பாராளுமன்றம் பிரதமர் டட்லி சேனநாயக்கவினால் கலைக்கப்பட்டது.

**முதலாம் பாராளுமன்றத் தேர்தல் பற்றி.....**

எல்.எம். டி. த. சில்வா ஆணைக்குழுவின் எல்லை நிர்ணயத்தின் படி சுதந்திர இலங்கையில் 1947,1952 மற்றும் 1956 ஆகிய வருடங்களில் மூன்று பாராளுமன்றத் தேர்தல்கள் நடைபெற்றுள்ளன. முதலாம் பாராளுமன்றத் தேர்தல் 1947 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மற்றும் செப்ரெம்பர் மாதங்களில் மொத்தம் 19 நாட்கள் நடைபெற்றது.

ஓர் உறுதியான அரசாங்கத்தை அமைப்பதற்குப் போதுமான ஆசனங்களை எக்கட்சியுமே பெறவில்லை. 96 ஆசனங்களில் 42 ஆசனங்களை வென்றெடுத்த ஐக்கிய தேசிய கட்சி ஆட்சியை அமைத்தது. ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் டீ. எஸ். சேனநாயக்க இலங்கையின் முதலாவது பாராளுமன்றத்தின் பிரதமராகத் தெரிவு செய்யப்பட்டார்.

எதிர்க்கட்சித் தலைவராக டாக்டர் என்.எம். பெரேரா தெரிவுசெய்யப்பட்டார். அன்றைய நிலையில் இடதுசாரி கட்சிகளுக்கு செல்வாக்கு இருந்தபோதும் ஐக்கிய தேசிய கட்சி தேர்தலில் பெற்ற வெற்றி அரசியல் சீர்திருத்த இயக்கத்தில் அதன் தலைவர்கள் வகித்த பங்கும், நாட்டுக்கு விடுதலை பெற்றுக்கொடுத்தமையும் அதன் தலைவர் டீ. எஸ்.சேனநாயக்கவை தேசபிதா என மக்கள் மதித்தமையுமே காரணங்களாகக் கொள்ளப்படுகின்றன.

இந்நிலையில் இலங்கைத் தமிழ் மக்களின் நலன்களைக் காக்கவென ஆரம்பிக்கப்பட்ட அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், முதலாவது பாராளுமன்றத் தேர்தலில் 7 ஆசனங்களில் வெற்றிபெற்று எதிர்கட்சியில் இடம்பெற்ற போதிலும் சுமார் ஒரு வருட காலத்தில் ஐக்கிய தேசிய கட்சியை ஆதரித்து அரசாங்க கட்சியில் சேர்ந்து கொண்டு கட்சியின் தலைவர் ஜீ.ஜீ. பொன்னம்பலம் மந்திரிப் பதவியையும் பெற்றுக் கொண்டார்.

முதலாவது பாராளுமன்றத் தேர்தல் மூலம் இடது சாரிகள் வரலாற்றில் முக்கிய சக்தியாய் எழுச்சி பெற்றிருந்தனர். டி.எஸ்.சேனநாயக்கா மிகவும் வெளிப்படையான தெளிவான வலது சாரித் தலைவராவார். இன அடிப்படையில் சிங்கள மக்களின் தலைவராக டி.எஸ். சேனநாயக்கா காணப்பட்டார். தமிழ்த் தலைவராக ஜீ.ஜீ.பொன்னம்பலம் காணப்பட்டார். சோசலிஷ முகாமிற்கு என்.எம். பெரேரா, கொல்வின் ஆர்.டீ சில்வா, பிலிப் குணவர்தன போன்றோர் முன்னணித் தலைவர்களாய்க் காணப்பட்டனர்.

நடேச ஐயர் தலைமையிலான இலங்கை இந்திய காங்கிரஸ் (பின்பு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் என பெயர் மாற்றப்பட்டது). மலையகத்தில் ஏழு பாராளுமன்ற ஆசனங்களை முதலாவது பாராளுமன்றத் தேர்தலில் கைப்பற்றியிருந்தது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வைத்தியசாலை...

வைத்தியசாலைக்குச் சென்றபோது உயிரிழந்தார்.


இம் மரணம் தொடர்பில் கரவெட்டி திடீர் மரண விசாரணை அதிகாரி வேலுப்பிள்ளை பாஸ்கரன் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60)

## வீட்டில் தனிமை...

சேர்ந்த பிரேமச்சந்திரன் வதனராணி (வயது-73) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

வீட்டில் துர்நாற்றம் வீசிய நிலையில் ஞாயிற்றுக்கிழமை (26) இரவு சம்பவ இடத்துக்குச் சென்ற கரவெட்டி திடீர் மரண விசாரணை அதிகாரி வேலுப்பிள்ளை பாஸ்கரன் விசாரணைகளை மேற்கொண்டு பிரேத பரிசோதனைக்கு அறிவுறுத்தினார். (ம-7,60)



















## சுன்னாகத்தில்...

(வயது-70) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

சடலம் காணப்படுவதாகக் கிடைத்த தகவலுக்கமைய நேற்று திங்கட்கிழமை (27) மாலை சம்பவ இடத்துக்குச் சென்ற யாழ்.மாவட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி ஆறுமுகம் ஜெயபாலசிங்கம் விசாரணைகளை மேற்கொண்டு பிரேத பரிசோதனைக்கு அறிவுறுத்தினார். (ம-7,60)

## 15 இலட்சம்...

ரணைகளில் வெலிகம பிரதேச சபைத் தலைவர் லசந்த விக்ரமசேகரவின் கொலை, டுபாயிலிருந்து பெறப்பட்ட 15 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள ஒப்பந்தத்திற்காக மேற்கொள்ளப்பட்டது என்றும் கொலைக்கு முன்னர் அந்தப் பணம் கொலையாளிக்கு ரொக்கமாக வழங்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸ் விசாரணைகள் தற்போது வெளிப்படுத்தியுள்ளன.

இதேவேளை கடந்த 22ஆம் திகதி இடம்பெற்ற வெலிகம பிரதேச சபைத் தலைவரின் கொலை தொடர்பாக இதுவரை கைது செய்யப்பட்ட 7 பேர் மேலதிக விசாரணைகளுக்காக நிதி மோசடி விசாரணைப் பிரிவிடம் (FCID) ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை வெலிகம பிரதேச சபைத் தலைவர் சுட்டுக் கொல்லப்பட்டமை குறித்து பல பொலிஸ் குழுக்கள் விசாரணை நடத்தி வருகின்றன. (ம-7)

## ஊழியர் சங்கம்...

மொழிகளை நிறைவேற்றக்கோரி குறித்த போராட்டத்தில் ஈடுபடவுள்ளது. (ம-7)

## 31 ஆயிரத்துக்கு...

சேதமடைந்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது. (ம-7)

## அநுர அரசாங்...

இது குறித்து மேலும் கருத்து வெளியிட்டுள்ள அவர்,

நகர சபைகளின் மேயர்கள், நகர சபை உறுப்பினர்கள், பிரதேச சபைத் தலைவர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்குப் பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும்.

சமீபத்தில் கொலை செய்யப்பட்ட வெலிகம பிரதேச சபைத் தலைவர் தனக்குப் பாதுகாப்பு தேவை என்று பொலிஸ்மா அதிபரிடம் தெரிவித்திருந்தார். ஆனால் அவருக்குப் பாதுகாப்பு வழங்கப்படவில்லை.

ஒருவர் இறந்த பிறகு அவரது கடந்த கால செயல்களைக் குறிப்பிட்டு கொலையை மறைக்க பொலிஸ் துறைக்கு பொறுப்பான அமைச்சர் ஆனந்த விஜேபால பாராளுமன்றத்தில் ஆற்றிய உரை குறித்து நான் மிகவும் கவலைப்பட்டேன்.

வெலிகம பிரதேச சபைத் தலைவர் அப்போது தனது பாதுகாப்புக்காக முன்வைத்திருந்த கோரிக்கையை நிறைவேற்றியிருந்தால் அவர் இன்றும் உயிருடன் இருந்திருப்பார்.

ஏதாவது நடக்கும் முன் தன்னைப் பாதுகாத்துக் கொள்வது பொருத்தமானது என்பதை நான் அரசாங்கத்திற்கு நினைவூட்டுகிறேன். எனவே பொதுப் பிரதிநிதிகளுக்கு பாதுகாப்பு வழங்குமாறு அரசாங்கத்தை நான் கேட்டுக்கொள்கிறேன்.

தினந்தினமும் நடக்கும் துப்பாக்கிச் சூடு நிறுத்தப்பட்டதாக பொலிஸுக்குப் பொறுப்பான பிரதி அமைச்சர் சுனில் வட்டகல கூறியிருந்தாலும் இந்தத் துப்பாக்கிச் சூடு அரசாங்கத்தின் தேவைக்காகவே நடத்தப்பட்டதா? என்ற சந்தேகம் உள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (ம-7)

## அரசாங்கத்துக்கு...

அரசாங்கத்துக்கு எதிராக எதிர்வரும் நவம்பர் 21ஆம் திகதி நுகேகொடையில் நடைபெறவுள்ள "மஹ ஜனஹண்ட (மாபெரும் மக்கள் குரல்)" எதிர்ப்புப் பேரணி குறித்துக் கலந்துரையாடுவதற்காக எதிர்க்கட்சிகளின் முக்கிய பிரமுகர்கள் மற்றும் பல்வேறு அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் நேற்று கொழும்பு - கொம்பனித் தெருவில் உள்ள பிரபல விருந்தகம் ஒன்றில் அவசர சந்திப்பை நடத்தினர்.

மிகவும் இரகசியமாக நடைபெற்ற இந்தச் சந்திப்பில், எதிர்வரும் நவம்பர் 21 பேரணி குறித்து நீண்ட நேரம் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இதன்போது, ஒரு அரசியல் தலைவர், "மஹ ஜன ஹண்ட பேரணியை அரசாங்கமும் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருக்கிறது. எனவே, அதிகபட்ச ஒழுக்கத்துடன் இந்தப் பேரணியை நடத்த வேண்டும். ஏனெனில் அரசாங்கம் இந்தப் பேரணியில் குழப்பங்களை ஏற்படுத்த முயலலாம்' என்று எச்சரித்துள்ளார்.

இடதுசாரி பாரம்பரிய அரசியல் கட்சியின் தலைவர் ஒருவர், "ஐக்கிய மக்கள் சக்தி" நிச்சயமாகப் பங்கேற்கிறதா?" என்று வினவினார்.

அதற்குப் பதிலளித்த எதிர்க்கட்சியின் சிரேஷ்ட தலைவர் ஒருவர், "ஆம், நிச்சயமாகப் பங்கேற்கிறது. இது தொடர்பாக கலந்துரையாடல் அண்மையில் நடந்த கூட்டங்களில் பாராளுமன்ற உறுப்பினர் சுஜீவ சேனசிங்க தொடர்ந்து கலந்து கொண்டார்.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு தலவத்து கொடையில் யூரியூபர்கள் நடத்திய சந்திப்பிலும் சுஜீவ சேனசிங்க பங்கேற்றார். எனவே, ஐக்கிய மக்கள் சக்தி குறித்து எந்தப் பிரச்சினையும் இல்லை. [illegible] சிலர் எங்களுடன் ஒருங்கிணைப்புப் பணிகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர்" என்று உறுதிப்படுத்தினார்.

இந்தச் சந்திப்பில், நுகேகொடை பேரணிக்கான ஊடகப் பிரசாரம் மற்றும் சமூக ஊடகப் பிரசாரப் பொறுப்புகளைப் பிரித்துக் கொள்வது குறித்தும் முடிவெடுக்கப்பட்டது.

இது குறித்து மேலும் கலந்துரையாட விரைவில் மற்றுமொரு சந்திப்பு நடத்தவும் தீர்மானிக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் உதய கம்மன்பில, சாகர காரியவசம், மகிந்த அமரவீர, தலதா அத்துகோரள, அநுர பிரியதர்ஷன யாப்பா, பிரசன்ன ரணதுங்க, டிரான் அலஸ், டி.வி. சானக, மொஹமட் முஸம்மில், அஜித் ராஜபக்ஷ, சஞ்ஜீவ எதிரிமான்ன, பிரேமநாத் சி. தொலவத்த, அசங்க நவரத்ன, சுகீஷ்வர பண்டார, சாகல ரத்நாயக்க உள்ளிட்ட பல அரசியல் பிரமுகர்கள் கலந்து கொண்டனர். (ம-7)






















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
24 - 12 - 1935



மறைவு
26 - 10 - 2025

## பாலசிங்கம் நாகரத்தினம்மா

(ஓய்வுபெற்ற விஞ்ஞான ஆசிரியை– யாழ்ப்பாணக் கல்லூரி)

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் வட்டுக்கோட்டையை வசிப்பிட மாகவும் கொண்ட பாலசிங்கம் நாகரத்தினம்மா அவர்கள் கடந்த (26.10.2025) ஞாயிற்றுக்கிழமை அன்று இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - வள்ளியம்மை தம்பதியரின் அன்புப் புதல்வியும் காலஞ்சென்றவர்களான பேரின்பநாயகம், ஓங்காரவடிவேல் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்றவர்களான இளையதம்பி பாலசிங்கம் (ஒய்வு பெற்ற உதவி அரசாங்க அதிபர் - வேலணை) அவர்களின் அன்ப மனைவியும் காலஞ்சென்ற இளையதம்பி - வியாழாச்சி தம்பதியரின் மருமகளும் பத்மராஜா (காணிப்பதிவகம், மாவட்ட செயலகம் - யாழ்ப்பாணம்), பத்மா (கால்நடை வைத்திய அலுவலகம் - வட்டுக்கோட்டை) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சிவாஜினி (யா/வட்டு மத்திய கல்லூரி), ஆனந்தராசா ஆகியோரின் மாமியாரும் விதுஷன், கஜலக்ஷன், ஸைந்தவி, ஸருனிஷ், ஸர்வின், ஸஜானா, ஸஔருதிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான யோகாம்பிகை, விமலாதேவி மற்றும் விஜயராணி ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (28.10.2025) செவ்வாய்க்கிழமை காலை 07.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்ததுறை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறி வித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

அரசடி வீதி,
வட்டுக்கோட்டை.
(5758)
தகவல் :
குடும்பத்தினர்

# ஆசிரியர் வீட்டில் திருட்டு

நீர்வேலியில் ஓய்வு பெற்ற ஆசிரியர் ஒருவரின் வீட்டில் நேற்று திருட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் கோயிலுக்கு அருகாமையில் வசித்து வரும் குறித்த ஆசிரியர் நேற்று கோவி லுக்குச் சென்றிருந்த வேளை இந்தத் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதன்போது நகையும் ஒரு தொகைப் பணமும் களவாடப்பட்டுள்ளதாகப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட் டுள்ளது.

இது குறித்து பொலிஸார் விசாரணை களை முடுக்கி விட்டுள்ளனர். (ம-7)

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
ஆகாஸ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளி நொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித் துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-4201)
076 825 7716 (ஆகாஸ்)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127


உடனடி வேலைவாய்ப்பு
நிர்வாக உத்தியோகத்தர்
விமான பயணச்சீட்டுக்கள் | விரைவு பொதிகள் சேவைகள் | விசா சேவைகள்
40 வயதிற்குட்பட்டோர் விண்ணப்பிக்கலாம் (ஆண்கள் விரும்பத்தக்கது)
சம்பளம் 30,000/- 50,000/-
எமது நேரடி கிளைகள் (C-4203)
V2 TRAVELS 076 1410725 076 8226236
v2vacancies@gmail.com

கனடா - வரி இல்லாமல்
விரைவு பொதிகள் சேவை
5-9 Kg 3670/-
11-16 Kg 2640/-
21-27 Kg 2440/-
குறைந்த விலை -நிறைந்த சேவை
கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
14 நாட்களில் Delivery (C-4203)
UK 11Kg - 1390/- France 11Kg - 2220/- Germany 11Kg - 2010/-
Swiss 11Kg - 2480/- Australia 11Kg - 2150/- Italy 11Kg - 2270/-
எமது நேரடி கிளைகள்
V2 TRAVELS 076 822 6241 076 822 6237

யாழ்ப்பாணத்தில் Voyzant
சுற்றுலாப் பயணம்
மலேசியா, இந்தோனேசியா, தாய்லாந்து, சிங்கப்பூர், வியட்நாம், மாலைதீவு, துபாய் போன்ற நாடுகளிற்கான சுற்றுலாப் பயணங்கள் தனிப்பட்ட/ குழுக்களிற்கு ஏற்றவாறும் செய்து தரப்படும்.
மேலதிக விபரங்களுக்கு : Voyzant(PVT)Ltd
No:617&619, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.
(OLR Church இற்கு அருகில்)
077 284 9535, 021 222 6866
(5725)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமக

# மரண அறிவித்தல்



தோற்றம் 21.02.1952 | மறைவு 27.10.2025

## சிவலிங்கம் சிவமூர்த்தி

(உரிமையாளர் – ஸ்ரீ சிவரஞ்சனா நகையகம்)

மட்டக்களப்பு ஒந்தாச்சிமடத்தைப் பிறப்பிடமாகவும் கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட சிவலிங்கம் சிவமூர்த்தி அவர்கள் நேற்று (27.10.2025) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவலிங்கம் - கண்ணம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ் சென்றவர்களான பூபாலு - மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் திலகவதி அவர்களின் பாசமிகு கணவரும் ஜீவராணி, திருமகள், கிஷோக்குமார், நாகேந்திரன், கிஷாஹினி, சுகந்தராஜா (அப்பன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் பரமேஸ்வரன், சதீஸ்கரன், பிரியதர்ஷனி, சாவித்திரி (பாமா), அருள்கோடீஸ்வரன், மயூரா ஆகியோரின் அன்பு மாமனாரும் சிவாஞ்சனா, கஜவதனன், ராமஸ்ரீ, துஷாரஹா, தரணிகா, சரபின், ஸ்ரீனா, அபிஷனா, தேனீகா, தட்ஷணியா, துளசிகா, ஹரித்திரேசன், லெஜினா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.10.2025) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

G.P.S வீதி,
விளையாட்டரங்க வீதி,
கல்வியங்காடு.
(1679)
தகவல் : குடும்பத்தினர்
077 724 2230
077 539 3682

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.10.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org